Registered as a Newspaper


# உதயன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுடர் : 36<br>கதிர் : 347 | சனிக்கிழமை | ஐப்பசி 27 ஆம் நாள்<br>13 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 20<br>விலை: 30 | செய்தி : 021 493 0000<br>விளம்பரம்: 021 493 1111 |


- பட்டதாரிப் பயிலுநர்களுக்கு ஜனவரியில் நிரந்தர நியமனம்
- அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைச் சீராக்க ரூ.30,000 மில்லியன்
- காணாமலாக்கப்பட்டோருக்கு ரூ.300 மில்லியன் இழப்பீடு
- பழிவாங்கப்பட்டோருக்கு ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு
- அரச அலுவலர்கள் மோ. சைக்கிள் பெற ரூ.500 மில்லியன்
- அரச அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 65 ஆக உயர்வு
- எம்.பிக்களின் ஓய்வூதியத் தகுதிக் காலம் 10 வருடங்கள்
- நாடு முழுவதும் தடையற்ற 5ஜி வலையமைப்பு
- அரச அலுவலகங்களில் புதிய கட்டடங்கள் அமைக்க 2 வருடங்கள் தடை
- அரச அலுவலர்களுக்கான எரிபொருள் 5 லீற்றரால் குறைப்பு
- அமைச்சர்கள், அதிகாரிகளுக்கான மாதாந்த தொலைபேசிக் கட்டணக் கொடுப்பனவு 25 வீதத்தால் குறைப்பு
- அனைத்துப் பாடசாலைகளுக்கும் நவீன இணைய வசதி
- சிகரட்டின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு
- மது விலையை அதிகரித்து லாபம் பெற முடிவு

# பட்ஜெட் 2022

# ஏமாற்றம்!!



- விலைவாசிக்கு தீர்வில்லை
- சம்பள உயர்வில்லை
- அபிவிருத்திகளுக்கும் மட்டுப்பாடு
- மக்கள் நலத்திட்டங்கள் ஏதுமில்லை

கொழும்பு, நவம்பர் 13

ராஜபக்ச அரசு ஆட்சிக்குவந்த பின்னர் முன்வைக்கப்பட்ட இரண்டாவது பாதீடும் அனைத்து இன மக்களுக்கும் பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது. நேற்று முன்வைக்கப்பட்ட பாதீட்டில் மக்களுக்கு எந்தவொரு நிவாரணம் இல்லை, பொருள்களுக்கான விலைக்குறைப்பு இல்லை, அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பு இல்லை முற்றிலும் பாதகமான ஒரு பாதீடே முன்வைக்கப்பட்டுள்ளது என்று பொருளியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

19 ➤

## துண்டுவிழும் தொகை 1,628 பில்லியன் ரூபா!

கொழும்பு, நவ. 13

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மானியங்கள் உள்ளடங்கலாக

19 ➤



## சோமாலியாவாக மாறும் இலங்கை!

எதிர்கட்சித்தலைவர் விசனம்

கொழும்பு, நவ. 13

"எமது நாட்டை சோமாலியா நாடு போல் ஆக்குவதற்கான வரவு செலவுத் திட்டமே

19 ➤

## பொருள்களின் விலை அதிகரிப்பை நாட்டில் கட்டுப்படுத்தவே முடியாது!

பாதீட்டைச் சமர்ப்பித்து கையை விரித்தார் பஸில்

கொழும்பு, நவ. 13

பொருள்களின் விலையை அதிகரிப்பது சாதாரணமாகியுள்ளது. இதனை தேசிய ரீதியில் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. சர்வதேச உதவிகளும் தேவையாகும். எனினும், உலக நாடுகள் முகங்கொடுக்கும் பல்வேறு சவால்களுக்கு நாங்களும் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது

19 ➤

## கடன் சுமை அதிகரிக்கும்!

சாடுகிறார் ஜே.வி.பி தலைவர்

கொழும்பு, நவ. 13

"பொருளாதார மேம்பாட்டை இலக்காகக் கொண்டு அல்ல, மாறாக கடன்களை இலக்கு வைத்து தயா

19 ➤

## தொற்று - 723 சாவு 23

ஏக காலத்தில் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 13

இலங்கையில் நேற்று 723 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரி

19 ➤



" தோசையின்ர விறுத்தத்தில ஆட்டுக்கல்லுக்கொரு மாலையாம். இவையின்ர ஆட்சி சீத்துவத்தில பட்ஜெட்தான் இல்லாத குறை...!"

முச்சந்தி முரளி



ரூ.55 மில்லியனில் சீரமைக்கப்பட்ட

## யாழ்.இந்துக்கல்லூரியின் விளையாட்டுத்திடல் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

நவீன வசதிகளுடன் 55 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டுத் திடல் நேற்றுமுற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

19 ➤

சீரற்ற காலநிலையால்

## யாழில் பாதிக்கப்பட்டோர் 34,219 பேராக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுவரை 10 ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 219 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்து பிரிவின் உதவிப் பணிப்பாளர்

19 ➤

புங்குடுதீவு மடத்துவெளியில்

## 30 ஏக்கரில் இறால்பண்ணை; தென்பகுதி நபருக்கு அனுமதி

கடற்றொழில் அமைச்சு கைங்கரியம் மீனவர்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மடத்துவெளி பகுதியில், தென்குதியைச்சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவர் முப்பது

15 ➤



## 2022 ‘பட்ஜெட்’ மேலும் சில விடயங்கள்

- காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக, மேலதிகமாக 300 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களுக்காக, பல்வேறு காலப்பகுதியில் காணாமல்போனவர்களின், உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 300 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு முன்மொழியப்பட்டுள்ளது.
- கடந்த ஆட்சியின்போது அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேலதிகமாக 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். “ 2015 2019 காலப்பகுதியில் கடந்த அரசால், எதிர் அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். அப்போதைய ஆட்சியாளர்களின் மனநிலையை புரிந்துகொள்ள முடியவில்லை. இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. எனவே, மேற்படி காலப்பகுதியில் அநீதி இழக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மேலதிகமாக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு முன்மொழிகின்றேன். அரச பணியாளர்களின் மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- முச்சக்கர வண்டிகளுக்காக அதிகாரசபை ஓய்வூதியத் திட்டத்துக்கு ரூ.100 பில்லியன்
- புதிய வியாபாரங்களுக்கு 2022 இல் பதிவுக்கட்டணம் இல்லை மதத்தலங்களை புனரமைக்க ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு.
- உலக சந்தையில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட ஏனைய பொருள்களின் விலை அதிகரிப்பால் உள்நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரித்து பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது. அவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு ரூ.31,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- கைதிகளின் நலன்களுக்காக மேலதிகமாக ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு.
- பொதுமக்கள் பாதுகாப்புக்கென பொலிஸ் திணைக்களத்துக்கு ரூ.500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- வனஜீவராசிகள் பாதுகாப்புக்கென ரூ.1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- கொரோனாவால் பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர்களுக்கு ரூ.1500 மில்லியன் ஒதுக்கீடு.
- தொற்றுக்காலத்தில் பாதிக்கப்பட்ட முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு ரூ.700 மில்லியன் ஒதுக்கீடு.
- கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட மொத்த, சிறு, மத்திய வியாபாரிகளுக்கு ரூ. 5,000 மில்லியன் ஒதுக்கீடு.
- கொரோனாக் காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டமையால் பாதிக்கப்பட்ட பஸ், வேன் உரிமையாளர்களுக்கு ரூ.400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- எம்.பிக்களின் தொகுதிகளுக்கு மேலதிகமாக ரூ.5 மில்லியன் ஒதுக்கீடு.
- மலையகத்தில் புதிய குடியிருப்புகளை அமைக்க ரூ. 500 மில்லியன் ஒதுக்கீடு.
- வீடு மற்றும் நகர அபிவிருத்திக்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- வீதி அபிவிருத்திக்கென 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு
- பற்றிக் ஆடை உற்பத்தி உள்ளிட்ட தேசிய உற்பத்திகளை அதிகரிக்க 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
- பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீட்டு சட்டத்தின் ஊடாக இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
- மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
- பெருந்தோட்ட, சிறு பயிர்ச்செய்கைகளின் விளைச்சலை அதிகரிப்பதற்காக நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- ஓய்வூதியம் பெறாத சிரேஸ்ட பிரஜைகளுக்கு ஓய்வூதியத் திட்டம் வழங்குவதற்காக 100 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.
- அரச நிறுவனங்களில் மின்சார செலவை குறைப்பதற்கு சூரிய சக்தியை உபயோகிக்க பரிந்துரைகள்.



# ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் ஐ.தே.க. போராட்டம்

**கொழும்பு, நவ. 13**

**அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு கொடுத்தல், உரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நேற்று நடத்தியது.**



மக்கள் கண்ணீர் வடிப்பதை அறியாத மோசமான இந்த அரசாங்கத்தை இல்லாதொழித்து மக்களின் துயர் துடைக்கும், சர்வதேச ரீதியில் நல்லுறவை பேணும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அதிகாரம் மீண்டும் மலர வேண்டுமென்றும் இதில் கலந்துகொண்ட ஐ.தே.க. ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பியும், பதாகைகளைத் தாங்கியும் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

மேலும், எமது நாட்டு விவசாயிகளுக்கு உரம் இல்லை, பட்டினிச் சாவில் மரணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது, அரிசியின் விலையை நிர்ணயிப்பது டட்லி சிறிசேனவா? அதிகரித்துச் செல்லும் வாழ்க்கை செலவு, நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்காதே, குறைந்து செல்லும் டொலர் கையிருப்பு, கெரவலப்பிட்டி மின் நிலைய பங்குகள் விற்பனை உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாகைகளை தாங்கி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

விகாரமாதேவி பூங்காவுக்கு அருகில் ஆரம்பமாகி லிப்டன் சுற்றுவரை வந்த இந்த இந்த ஆர்ப்பாட்ட பேரணியில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார, கட்சியின் உப தலைவர் ருவன் விஜேவர்த்தன, கட்சியின் உறுப்பினர்களான நவீன் திசாநாயக்க, சாகல ரத்நாயக்க , கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க, உள்ளூராட்சி மன்றத்தின் முன்னாள் மற்றும் இந்நாள் உறுப்பினர்கள் கட்சியின் உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார,

ராஜபக்சவின் வரவு செலவுத் திட்டமானது வேதனையில் துன்புறும் மக்களுக்கு உலக்கையால் அடித்தது போல் உள்ளது. விவசாயத்தை செய்வதற்கு முறையான திட்டமில்லை, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப திட்டமில்லை, சுகாதாரத் துறையை மேம்படுத்த தெரியவில்லை , அரச ஊழியர்களை பலப்படுத்த திட்டமில்லை, வியாபாரத்தை கட்டியெழுப்ப திட்டமில்லை, வர்த்தகர்களை பாதுகாக்க திட்டமில்லை. மக்களின் நேரத்தை வீணாக செலவழித்த வரவு செலவுத் திட்டமாகவே பார்க்கிறோம். - என்றார்.

(த-இ)

# பருத்தித்துறை பிரதேச சபை ‘பட்ஜட்’ நேற்று நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. சபையின் விசேட கூட்டம் நேற்றுக் காலை சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

வரவு செலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விட்டபோது 16 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 4 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஓர் உறுப்பினரும் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஈ .பி.டி.பியின் சார்பில் கலந்துகொண்ட ஒரேயோரு உறுப்பினர் மாத்திரம் எதிராக வாக்களித்தார். எஞ்சிய ஈ.பி.டி.பியின் 2 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு உறுப்பினரும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

(த-22)

# அரசியல் கைதிகளின் விவரங்களைத் தரவும்

## செயலணி உறுப்பினர்கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில், அவர்களுடைய உறவினர்கள் சமர்ப்பித்த விவரங்களுடனானகோரிக்கை ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, மேற்குறித்த செயலணியின் உறுப்பினர் ஐ.தயானந்தராஜா தெரிவித்தார்.

இதுவரை அது பற்றிய விவரங்களை வழங்காத அரசியல் கைதிகளின் உறவினர்கள்,திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் 076603 4900 என்ற தன்னுடைய இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு விவரங்களை வழங்குமாறு குறித்த செயலணியின் உறுப்பினர் ஐ.தயானந்தராஜா அறிவுறுத்தியுள்ளார்.

(த)

# வீடுபுகுந்து தாக்குதல் நடத்திவிட்டு பெருந்தொகை நகைகள் கொள்ளை

## இரணைப்பாலையில் பயங்கரம்

**முல்லைத்தீவு, நவ. 13**

**முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப் பாலை 5ஆம் வட்டாரப்பகுதியில் 8 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் புகுந்து வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.**

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர்கள் நேற்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
8 பேர் கொண்ட மேற்படி கும்பலில் 4 பேர் வெளியில் நிற்க மிகுதி நான்கு பேர் வீட்டுக்குள் நுழைந்து வீட்டுக்குள் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு, 6 தங்கக் காப்புகள், ஒரு சங்கிலி, ஒரு நெக்லஸ், ஒரு மோதிரம், தோடுகள், பெறுமதியான நான்கு தொலைபேசிகள் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
50 வயதுடைய பெண்ணொருவர் தாக்குதலில் காயமடைந்ததுடன் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-19)



# சீரற்ற காலநிலையால் கடற்றொழில் பாதிப்பு

மன்னார்,நவ.13
தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடற்பகுதியில் வீசி வரும் அதீத காற்று காரணமாக, மூன்றாவது நாளாகவும் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளைத் தவிர்த்துள்ளனர்.
மன்னார் தீவகப் பகுதிகளை சூழ்ந்த கடற்பரப்பின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்துக் காணப்படுகின்றமையாலும், கடற்பகுதியில் அதீத காற்று வீசுவதனாலும் மீன்பிடி நடவடிக்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மீனவர்களின் படகுகள் மற்றும் வலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, கடற்கரையை அண்மித்த பகுதிகளில் அடைய விடப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. (ஒ-4,213)

# இலங்கைக் கடற்பரப்பில் சீன உரக்கப்பல் நங்கூரம்

கொழும்பு, நவ. 13
சீனாவின் உரம் ஏற்றிய கப்பல் தற்போது இலங்கையின் நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட 12 கடல் மைல் தொலைவில் களுத்துறை கடற்பரப்புக்கு அருகில் நங்கூரமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கப்பல் திரும்பிச்செல்ல வேண்டுமாக இருந்தால், குறித்த உரத்தை ஏற்றுமதி செய்த நிறுவனம் அரசுக்கு சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளது என்று குறித்த உரத்தின் இறக்குமதியாளரான அரச உர நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

# நிகழ்வுகளுக்கு முன்னனுமதி கட்டாயம்

யாழ்ப்பாணம், நவ.13
தென்மராட்சி பிரதேச மக்கள் சகல நிகழ்வுகளுக்கும் முன்னனுமதி பெறுவது கட்டாயம் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.
அதற்கமைவாக அனுமதி இல்லாமல் நடைபெறும் நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நிகழ்வுகளுக்கு அனுமதி பெறுவதாயின், கொரோனாத் தடுப்பூசி பெற்றிருப்பது அவசியம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,159)

# மூச்சுத்திணறல்: குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம்,நவ.13
மூச்சுத்திணறல் காரணமாக 3 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.
அராலி மேற்குப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான தியாகராசா ஜெயரஞ்சன் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சில நாள்க்ளாக தடிமன் மற்றும் காய்ச்சலால் அவதியுற்ற இவர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். எனினும் அவரது உடல் நிலையில் முன்னேற்றமில்லாத நிலையில் நேற்று முன்தினம் சங்கானை மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார்.
அங்கு அவருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.
நேற்றுக் காலை மூச்சுத்திணறல் ஏற்பட்ட நிலையில், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். (ஒ-4,10)




**கொ**ஞ்சநாளைக்கு மூதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்தவை. அவை வந்ததின்ர நோக்கம் , ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை இலங்கைக்கு குடுக்கிறதோ, வேண்டாமோ? எண்டு இஞ்சத்த சனத்தின்ர அபிப்பிராயத்தை அறியிறதுக்கு எண்டுதான் சொல்லுப்பட்டுது. ஆனால் அவை சாதாரண சனங்களோட கதைக்கேலை. சனத்தின்ர சார்பில புத்திஜீவிகளையும், செயற்பாட்டாளர்களையும், மீடியாக்காரரையும் தான் கண்டு கதைச்சவை. அப்பிடி போய் சந்திச்சிட்டு வந்த ஆக்கள் சொன்னதைக் கேட்டவுடன், சப்பெண்டு போட்டுது.

ஏனெண்டால் அவை அதுதான் உந்த ஐரோப்பிய ஒன்றியக்காரர் உண்மையில இஞ்சத்தை சனத்திட்ட அபிப்பிராயம் கேக்க வரேலை. தாங்கள் ஒரு முடிவை எடுத்துப் போட்டு, அதை வாழைப்பழத்தில ஊசி ஏத்துறமாதிரி,எங்களிட்ட திணிக்கிறதுக்குதான் அப்பிடி தெரிவுசெய்த கொஞ்சப் பேரைச் சந்திச்சிட்டுப் போயிருக்கினம். அப்பிடியெண்டா அவையின்ர முடிவு என்ன?

நாங்களும் வரிச்சலுகையை நிப்பாட்டத்தான் யோசிக்கிறம். அப்பதான் இந்த அரசாங்கம் கொஞ்சம் இறங்கி வரும். ஆனால் முதல் ஒருக்கா அப்பிடி வரிச்சலுகையை நிப்பாட்டேக்க, அரசாங்கம் எங்களோட கோவிச்சுக் கொண்டு, எல்லாத் தொடர்பையும் கட் பண்ணிப்போட்டுது. அதால உங்கட ( தமிழரின்ர) பிரச்சினையளைக் கூட எங்களால அறியமுடியாமல் போட்டுது. திரும்ப அப்பிடி ஒரு நிலை வரக்கூடாது எண்டதுதான் எங்கட விருப்பம் எண்டு ஐரோப்பிய ஒன்றியக்காரர் சொன்னவையாம். அப்பிடியெண்டால், ஜீ.எஸ்.பி வரிச்சலுகையை அவை நிப்பாட்டமாட்டினம். தொடர்ந்து பழையபடி குடுக்கப் போகினம் எண்டதுதான் அதின்ர அர்த்தம். ஆனால் மீனுக்கு தலையும், பாம்புக்கு வாலும் காட்டுற விலாங்கு மீன் மாதிரி இலங்கை அரசாங்கத்துக்கும் வரிச்சலுகை குடுத்திட்டு, எங்கட சனத்திட்டையும் நல்லபேர் வாங்கிறதுக்காண்டித்தான் ஐரோப்பிய ஒன்றியக்காரர் விசிட் பண்ணி இருக்கினம்.

இதொண்டும் தெரியாமல் எங்கட சனம் ஜெனிவாவில தீர்வு கிடைக்கும், அமெரிக்கா சப்போர்ட் பண்ணும், இந்தியா எங்களைக் கைவிடாது, ஐரோப்பிய ஒன்றியம் வரிச்சலுகையை நிப்பாட்டி அழுத்தம் குடுக்கும் எண்டெல்லாம் நம்பிக்கொண்டிருக்கு. ஏற்கனவே முள்ளிவாய்க்காலிலயும் இப்பிடித்தான் உந்த நாடுகளைநம்பி எங்கட சனம் அழிஞ்சது. அதுக்குப் பிறகும் அந்த நாடுகளைத்தான் நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறம். ஆனால் அந்த நாடுகளும் இன்னும் மாறேலை. அவைக்கு அவையின்ர தேவைதான் முக்கியம். இப்ப இவை வரிச்சலுகை குடுக்காட்டி, பிறகு இலங்கை ஒரேயடியா சீனாவின்ர பக்கம் போயிடும். அப்பிடி போகாமல் பாக்கவேணும் எண்டால் வரிச்சலுகை குடுத்தே ஆகோணும். மற்றப்படி வரிச்சலுகையை நிப்பாட்டினால், எல்லாத் தொடர்பும் இல்லாமல் போடும், தமிழருக்கு உதவ ஏலாமல் போடும் எண்டதெல்லாம் ரீல் தான். எப்பவும் பிறத்தியாரை நம்பிக்கொண்டிருந்தா நடுறோட்டிலதான் நிக்கவேணும். அதால இனியாவது நாங்களா ஏதும் செய்தாத்தான் ஏதும் கிடைக்கும். விளங்கினாச் சரி.




- பட்சி

# நினைவுகூரும் நாளை மாற்ற முயலாதீர்கள்!

## மறவன்புலவு சச்சிதானந்தன் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், நவ.13**

**போரில் இறந்தோரை நினைவுகூரும் வழமையான நாளை மாற்ற வேண்டாம் என்றும் கலகத்தைக் கிளற வேண்டாம் என்றும் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.**



அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது

இறந்தோரை நினைவுகூரும் சடங்குகளைச் சைவர்கள் போர் காலங்களிலேயே தீர்மானித்துள்ளனர். போர் முடிந்த பின்பும் இறந்தோரை நினைவுகூர்ந்து சடங்குகள் இயற்றி வரும் சைவர்களைத் திசை திருப்பாதீர்.

உரோம கத்தோலிக்க கிரிகோரியன் நாள்காட்டிக்கமைய நினைவு கூர்க எனப் புதிய நாளைக் கத்தோலிக்க ஆயர் கூட்டம் சைவர்களை நோக்கிக் கூறுவதைக் கண்டிக்கிறேன்.

ஏற்கனவே வழமையில் இருந்த சந்திராயன நாள்காட்டியின் வளர்பிறை தேய்பிறைக் கணிப்பில் வானியல் அறிவின் துணையுடன் சைவர்கள் இறந்தோரை நினைவுகூரும் வழக்கத்தை மாற்றக் கத்தோலிக்க ஆயர்கள் முயல்வதைக் கண்டிக்கிறேன்.

கிறித்து பிறந்தநாளில் இருந்து வருகின்ற நாள்காட்டியைக் கொண்டு சைவராகிய இறந்தோரை நினைவுகூரும் நாளை நிர்ணயிக்காதீர். சைவர்களைக் கிருத்தவமயமாக்கும் கடந்த 400 ஆண்டுகால முயற்சியின் தொடர்ச்சியாகவே ஆயர்கள் கூட்டம் நினைவு கூரும் நாளை அறிவித்துள்ளதைக் கண்டிக்கிறேன்.

சைவர்கள் வழமைபோல இறந்தோரை வழிபாட்டுடனும் உணர்வு மீநிற்க உறவுகள் நடுவணாக, நினைவுகூர்வர். கத்தோலிக்க ஆயரின் அடிமை மோகக் கோரிக்கைக்கு அமையச் சைவர்கள் தம் நினைவு கூர்தல் முறைமைகளை வழமைகளை மாற்றமுடியாது.

கத்தோலிக்க ஆயர்களும் குருமாரும் கத்தோலிக்கத் தேவாலயங்களில் இறந்த கத்தோலிக்கர்களுக்குத் தாம் விரும்பிய நாளில் அல்லது நாள்களில் வழிபட்டு நினைவுகூர்தலை சைவர்களாகிய நாங்கள் ஆதரிக்கிறோம்.

கத்தோலிக்க கிரிகோரியன் நாட்காட்டியை சைவர்கள் மீது திணித்துச் சைவ மரபுகளை உடைத்தெறிய முயலும் கத்தோலிக்க ஆயர் கூட்டத்தின் அறிவித்தலை எச்சரிப்புடன் கண்டிக்கிறேன். என்றுள்ளது. (எ-இ)

# ரம்புக்வெலவின் பரிந்துரையை நிராகரித்தார் கோத்தாபய!

கொழும்பு, நவ.13

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் பரிந்துரைக்கப்பட்ட நியமனம் ஒன்று, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது.

மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்குச் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் மஹரகம அபெக்சா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் விஜித் குணசேகரவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

ஆயினும் அதை நிராகரித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவிக்கு மருத்துவர் சவீன் சேமகேவை நியமித்துள்ளார்.

மருத்துவர் சேமகே இராணுவ மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளராகப் பதவி வகித்தவர் என்றும், அவர் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பாகவும் செயற்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# 24 ஆண்டுகளின் பின்னர் பெண் "ஓ.ஐ.சி"

கொழும்பு, நவ.13

இலங்கை பொலிஸ் வரலாற்றில் 24 ஆண்டுகளின் பின்னர் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமைப் பொலிஸ் பரிசோதகர் காஞ்சன சமரக்கோன், கம்பஹா, நால்ல பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பெறுப்பேற்றார்.

1997ஆம் ஆண்டு பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட பின்னர் தற்போது காஞ்சன சமரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# விபத்தில் காயமடைந்த மாணவன் சாவு!

கொழும்பு. நவ.13

வெலிசர, மஹாபாகே மயானத்துக்கு அருகில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த 17 வயது மாணவன் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

16 வயதுடைய சிறுவன் ஒருவனால் அதிவேகமாக செலுத்தப்பட்ட சொகுசு வாகனம் வெலிசர பிரதேசத்தில் மேலும் சில வாகனங்களுடன் மோதுண்டதையடுத்து மேற்படி விபத்து சம்பவித்திருந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த மாணவன் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற மாணவனின் உறவினரான 52 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட 16 வயதுடைய மாணவன் மற்றும் அவரின் தந்தை ஆகியோர் வத்தளை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனா் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நகரசபைக்கு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி நவ.13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை அல்லாரை எல்லை வீதியில் அதிக வெள்ளம் காணப்படுகின்றதால் அதனை அகற்றுமாறு சாவகச்சேரி நகரசபைக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்ததாவது,

இந்த வீதி மிகவும் தாழ்வான பகுதி என்பதால் மழை பெய்யும் வேளைகளில் பல இடங்களில் வெள்ளம் தேக்கமடைந்து காணப்படும். அண்மையில் பெய்த மழையினால் மூன்று அடி உயரத்துக்கு வெள்ளம் காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்களும் வீதியைப் பயன்படுத்துவோரும் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, வீதியில் காணப்படும் வெள்ளத்தினை அகற்றித் தாருங்கள்- என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-ரி1-9)

✦ ✦ ✦ ✦

சாவகச்சேரி, நவ.13

சாவகச்சேரி நகரசபையினால் நிர்வகிக்கப்படும் உதயசூரியன் முன்பள்ளிக் கட்டடத்தைச் சுற்றி வெள்ளம் காணப்படுகின்றது. இதனால் முன்பள்ளிக்கு வருவதற்கு சிறுவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

எனவே, முன்பள்ளியை நடத்துவதற்கு, வெள்ளத்தை அகற்றித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-ரி1-9)

# நகரசபை அமர்வு

சாவகச்சேரி, நவ.13

சாவகச்சேரி நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீடுக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான ஆலோசனை அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது அமர்வில் கருத்துத் தெரிவித்த சபை உறுப்பினர் லலிதாராணி ரவீந்திரன், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்தைத் தெரிவு செய்து சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீட்டில் நிதி ஒதுக்க வேண்டும். அத்துடன், ஒவ்வொரு வட்டாரத்திலுமிருந்து ஒவ்வொரு குடும்பத்தைத் தெரிவு செய்து வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டுமென்று முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்தார்.

இந்த முன்மொழிவை ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டு பாதீட்டில் நிதி ஒதுக்க சம்மதம் தெரிவித்தனர். (ஒ-ரி1-9)

# 2,180 ஏக்கர் நெற்செய்கை முல்லைத்தீவில் பாதிப்பு

முல்லைத்தீவு,நவ.13

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் நேற்றுமுன்தினம் வரை 2 ஆயிரத்து 180 ஏக்கர் நெற்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட பதில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் யாமினி சசீலன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை 53 ஆயிரத்து 255 ஏக்கரை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட போதும், 38 ஆயிரத்து 370 ஏக்கர் செய்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா பிரதேசங்களின் கீழ் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் மழைகாரணமாக 2 ஆயிரத்து 180 ஏக்கர் அளவான நெற்பயிர்ச்செய்கை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. சில பிரதேசங்களில் 15 நாள்கள் பயிராகவும், சில இடங்களில் 25 தொடக்கம் 30 நாள்கள் பயிராகவும் காணப்படுகின்றது. அதனால் சில விவசாயிகள் மீண்டும் விதைக்கத் திட்டமிட்டுள்ளனர். அவர்களுக்கு மூன்று மாதங்கள் அல்லது இரண்டரை மாதங்கள் வயதான நெல்லை விதைக்கப் பரிந்துரை செய்துள்ளோம். நந்திக்கடல், சாலைக் கடல், முல்லைத்தீவு நகர் பகுதி, நாயாற்று கடல்நீரேரி, மன்னாகண்டல், மல்லிகைத்தீவு மற்றும் பேராறு போன்ற ஆற்றங்கரையை அண்மிய பகுதிகள் மற்றும் தாழ்நிலப் பிரதேசங்களில் தற்போது வெள்ளம் வழிந்தோடி வருகின்றது. அதனால் பெரியளவில் பாதிப்பு இல்லை - என்றார். (ஒ-4-19)

## எழுதுமட்டுவாழ் தெற்கில் நெற்செய்கை முற்றாக அழிவு

யாழ்ப்பாணம்,நவ.13

அண்மையில் பெய்த கனமழை காரணமாக எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட வயல் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். ஒட்டுவெளி, செட்டிக்கேணி, குஞ்சுவிழுபளை மற்றும் பெரிய விழுபளை ஆகிய வயல்பகுதிகள் அழிவைச் சந்தித்துள்ளன. பயிரழிவு தொடர்பாக சாவகச்சேரி கமநல சேவை நிலையம் மற்றும் கமநல திணைக்கள உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். கடந்த வருடமும் அறிக்கை சமர்ப்பித்தும் இன்று வரை பயிரழிவுக்கான நஷ்டஈடு வழங்கப்படவில்லை. இந்த வருடமேனும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-159)



## வீதிக்கு குறுக்காக வெட்டப்பட்ட குழி

*போக்குவரத்தில் சிரமம்*

யாழ்ப்பாணம்,நவ.13

கொடிகாமம் கச்சாய் வீதியிலிருந்து செல்லும் மருதடிப்பிள்ளையார் வீதிக்கு குறுக்கே குழி வெட்டப்பட்டுள்ளதால், அந்தப் பகுதியூடான போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தொடர்ந்து பெய்த மழை காரணமாக தேங்கியிருந்த வெள்ளத்தை அகற்றுவதற்காக, கடந்த வருடம் புதிதாக புனரமைக்கப்பட்ட வீதியை, அருகில் வசிப்பவர்கள் குறுக்காக வெட்டி வெள்ளத்தை வெளியேற்றியுள்ளனர். இதனால் வீதியூடாக பயணிக்கும் பலர் குழிக்குள் விழுந்து காயமடைகின்றனர். இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர், உப தவிசாளர் ஆகியோருக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படியான செயற்பாட்டை மேற்கொண்டவர்கள் மீது சாவகச்சேரி பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-159)

## குளங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

முல்லைத்தீவு,நவ.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை வீழ்ச்சி இல்லாத போதும், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பெரிய குளங்களில் 5 குளங்கள் வான்பாயத் தொடங்கியுள்ளன. காட்டாற்று வெள்ளவரத்துக் காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. முத்தையன்கட்டு நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 8 குளங்களில் 20 அடி நீர் கொள்ளளவு கொண்ட விசுவமடுக்குளம்,14 அடி நீர் கொள்ளளவு கொண்ட மருதமடுக்குளம், வவுனிக்குளம் நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 12 குளங்களில் 9 அடி நீர்கொள்ளளவு கொண்ட பழையமுறிகண்டிக்குளம், 9 அடி நீர் கொள்ளளவு கொண்ட கோட்டைகட்டிய குளம், 11 அடி நீர் கொள்ளளவு கொண்ட தேறாங் கண்டல் குளம் ஆகியன வான்பாய்கின்றன என்று மாவட்ட நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4-19)



## வீதியை மூடி வெள்ளம் நகர போக்குவரத்து தடை

முல்லைத்தீவு அம்பலவன்பொக்கணைக்கும் இரட்டைவாய்க்காலுக்கும் இடையிலான வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நகருக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களின் மக்கள் முல்லைத்தீவு நகரத்துக்குச் செல்ல முடியாதுள்ளனர். சுமார் 450 வரையான குடும்பங்களின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அவசிய தேவையுடையோர் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அதேவேளை மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கு பேருந்துச் சேவைகள் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாகவும் மக்கள் தொடர்ச்சியாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். (ஒ-4-13)

## வெள்ளத்தால் பாதிக்கப்படவிருந்த விவசாயிகளுக்கு தற்காலிக தீர்வு

யாழ்ப்பாணம்,நவ.13

தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்களுக்கு வெள்ள அழிவிலிருந்து தற்காலிக தீர்வு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்திக்கச் சென்ற விவசாயிகள் எழுத்து மூலமான மனுவை, ஆளுநரின் செயலாளரிடம் கையளித்தனர். உடனடியாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி மேற்கு பகுதியில் கைதடி, நாவற்குழி, தனங்களப்பு, மறவன்புலவு, தச்சன்தோப்பு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வயற்காணிகளில் ஏறத்தாழ ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. அதிகளவு மழை வீழ்ச்சி ஏற்பட்டால் கரையோரமாக உள்ள வயல்கள் வெள்ளத்தில் மூழ்குவது தொடர்கதையாக இருப்பதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். கடந்த மூன்று நாள்களாக வயற்காணிகளில் வெள்ளம் வடிந்தோடாது தேங்கியுள்ளது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்கள் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு நிரந்தரத் தீர்வு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கையொப்பம் இட்ட கடிதம் வட மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் வழங்கப்பட்டது. ஆளுநரின் செயலாளர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளால் நாவற்குழி செம்மணிப் பாலத்தின் அனைத்து வான்கதவுகளையும் திறந்து வைத்தார். அதனையடுத்து வெள்ளம் வடிந்தோடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்காலிகத் தீர்வை ஏற்றுக் கொண்ட விவசாயிகள், எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாவண்ணம் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த அனைவரும் விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (ஒ-4-159-9)

## இளைஞன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம்,நவ.13

வீட்டுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலையில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் தனது வீட்டுப் படலையில் நின்றவேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த இளைஞன் மீது வாள்வெட்டை மேற்கொண்டுள்ளனர். இதன் போது இளைஞனது கையில் காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த இளைஞன் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-27)

### அபாய வலயத்திலிருந்து வெளியேற மறுப்பவர்கள்

# பலவந்தமாகவே இனி வெளியேற்றப்படுவர்!

### நிவாரணம், இழப்பீடு வழங்கும் பணிகளும் முன்னெடுப்பு

**கொழும்பு, நவ. 13**

**“முன்கூட்டியே அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டும், மண்சரிவு சிவப்பு அபாய வலயத்திலிருந்து வெளியேற மறுப்பவர்கள், இனி பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள். இதற்கான அதிகாரம் மாவட்டச்செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.” இவ்வாறு, இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த புதன் கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பெருந்தொற்று மற்றும் இடர் காலங்களில் அறிவுறுத்தல்களைமீறி தேவையற்ற விதத்தில் சுற்றுலா செல்பவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சீரற்ற காலநிலை கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமானது. எனினும், முன்கூட்டியே எச்சரிக்கைப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. எனினும், சில தரப்பினர் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டமையைக் காணமுடிந்தது. ஆறுகளில் பாய்கின்றனர். வெள்ளநீர் வரும் போது நீந்த முற்படுகின்றனர். 20 உயிரிழப்புகளில் 13 உயிரிழப்புகள் நீரில் மூழ்கி இடம்பெற்றவை. இவற்றைத் தவிர்த்திருக்கலாம். இந்த உயிரிழப்புக்களுக்கு கவனவீனமும் ஒரு காரணமாகும்.

அத்துடன் தொற்று மற்றும் இடர் காலங்களில் வனாந்தரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு சிலர் சுற்றுலா செல்கின்றனர். பின்னர் எமக்கு அழைப்பை ஏற்படுத்துகின்றனர். அவர்களுக்கு மட்டுமல்ல அவர்களை மீட்கச் செல்லும் தரப்புகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் உள்ளது. எனவே, அறிவுறுத்தல்களைமீறி அநாவசியமான முறையில் சுற்றுலா செல்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், மண்சரிவு சிவப்பு அபாயத்தில் இருப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தும், அவர்கள் வெளியேறாத பட்சத்தில், அவர்களை பலவந்தமாக பொலிஸார் மற்றும் நீதிமன்றத்தின் ஊடாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கான அதிகாரம் மாவட்டச் செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார். (து-44)

## மோட்டார் சைக்கிள் திருடியவர் விபத்தால் பொலிஸில் மாட்டினார்

கிளிநொச்சி, நவ. 13

புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முசுரம்பிட்டிபகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை மோட்டார் சைக்கிளைத் திருடிய சந்தேகநபர் அதிவேகத்தில் சென்று விபத்துக்குள்ளானதை அடுத்து, பொலிஸாரிடம் மாட்டினார்.

விபத்தில் காயமடைந்த சந்தேகநபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளை தருமபுரம் பொலிஸார் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றன. (ம-113)



## வீதிப்புனரமைப்பு இடைநிறுத்தம்: போக்குவரத்துக்கு மக்கள் சிரமம்

கிளிநொச்சி, நவ.13

கிளிநொச்சி மேற்குக்கான வீதிப்புனரமைப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், பல கிராமங்களின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் கிளிநொச்சி நகரத்தில் இருந்து திருமுறிகண்டி வழியாக அக்கராயன் வரை வீதிப்புனரமைப்புக்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

அதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது.

இரண்டாம் கட்ட வேலைகள் கடந்த வருடத்துக்கு முன்னர் தொடங்கப்பட்டன.

அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம் வரையான வீதிகளில் 67 வீதம் வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. வன்னேரிக்குளத்தில் இருந்து பல்லவராயன்கட்டு பாலாவி வரையான வீதிகளைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர் 35 வீதமான வேலைகளை நிறைவு செய்திருந்தார்.

தற்போது ஒன்றரை மாதங்களாக வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரையான வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன் கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பாலாவி, சிவபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்தில் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர். அரைகுறையாக புனரமைக்கப்பட்டுள்ள வீதியால் பொதுமக்கள் நடந்து செல்வதில்கூட சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (ஒ-4-13)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு,நவ.13

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தால் பட்டப்பின் முது விஞ்ஞானமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தாவர கல இழைய வளர்ப்பு, விவசாய நுண்ணுயிரியல், பிரயோக புள்ளி விவரவியல், நிதிசார் கணிதம், இரசாயன கல்வியியல், கணித கல்வியியல் ஆகிய கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

https://science.cmb.ac.lk/masters-degree.programmes என்ற இணையத் தளத்தில் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தக் கற்கைகளுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். (ஒ-4)

★ ★ ★

கொழும்பு, நவ.13

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடமும், முகாமைத்துவப்பீடமும் இணைந்து நடத்தும் முகாமைத்துவக் கற்கைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொது நிதியியல், சந்தைப்படுத்தல் மற்றும் சுற்றுலாத்துறை துறைகளில் வர்த்தக முகாமைத்துவ முதுமாணிப் பட்டங்களுக்கான கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வர்த்தக முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் இரண்டு வருடங்களையும், வர்த்தக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு பட்டயக் கற்கை நெறி ஒரு வருட காலப் பகுதியையும் கொண்டதாகும். விண்ணப்பிப்போர் kal@mgt.sab.ac.lk என்ற இணைய வழி மூலமாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம். (ஒ-4)

## உணவுப் பொருள்கள் வழங்கல்

முல்லைத்தீவு,நவ.13

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்றின் கணுக்கேணி வட்டாரத்தில், உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டுவிலைச் சேர்ந்த, அமரர் தர்மராசா - செல்வநாயகியின் நினைவையொட்டி அவரின் மகனால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.



உணவுப் பொருள்கள், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் த.அமலனால் வழங்கி வைக்கப்பட்டன. (ஒ-ரி1-13)


## ஆளும்கட்சி எம்.பி.யின் விளம்பரப்பலகை சேதம்

வவுனியா, நவ. 13

வவுனியா, புதிய கற்பகபுரம் வீதியில் பொருத்தப்பட்டிருந்த ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் விளம்பரப் பெயர்ப்பலகை கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சேதமாக்கப்பட்டுள்ளது என்று பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் அபிவிருத்தி நிதியில், வவுனியா புதிய கற்பக புரம் வீதி சீரமைப்புச் செய்யப்பட்டு, கடந்தவாரம் மக்கள் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்பட்டது. அந்த வீதியில் அமைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகையே சேதமாக்கப்பட்டுள்ளது. விளம்பரப் பலகையில் இருந்த மஸ்தானின் உருவப்படமும் கிழித்தெறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-110)



## திறப்பு விழா

மடு , நவ. 13

மடுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜோதிநகர் வீதி திறந்து வைக்கப்பட்டது. ‘சுபீட்சத்தை நோக்கி’ தேசிய வேலைத் திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட இந்த வீதியை, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார், முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.தர்சன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், பொறியியலாளர்,றொயிஸ் டெல்பின் குரூஸ்,மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் அன்ரன் டபரேரா மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், பொது மக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி1-56)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களுக்கு ஒன்றுமில்லை

**கோ**த்தாபய ராஜபக்ச அரசின் வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தார். முன்னரே எதிர்வுகூறப்பட்டதைப்போன்று வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு ஒன்றுமில்லை. ஒரு சில நிதி வெட்டுக்களை அவர் கூறியிருக்கின்றார்.

அதனைவிட வழமைபோன்று வரவு – செலவுத் திட்டத்தில் பல கவர்ச்சிகரமான ஆனால் நிறைவேற்றப்படாத அறிவிப்புக்களையும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கான பழி கொரோனாப் பரவல் மீது சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சுமத்தப்படாது விட்டிருந்தால்தான் ஆச்சரியம். ஆனால், நாட்டை படுகுழிக்குள் தள்ளும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகள், நிர்வாகங்கள் தொடர்பில் நிதி அமைச்சர் அலட்டிக் கொள்ளவில்லை.

வரவு – செலவுத் திட்டத்தில் மக்கள் மகிழ்ச்சி கொள்ளும்படியான விலைக் குறைப்புக்கள் எவையும் இல்லை. அவற்றை வழங்க முடியாத வங்குரோத்து நிலையில் அரசு இருப்பதால் மக்களும் அதைப் பெரிதும் எதிர்பார்க்கவில்லை.

இவ்வாறானதொரு வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதன் ஊடாக, அடுத்த ஆண்டு மாகாணசபைத் தேர்தலும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஏனெனில் தேர்தலை இலக்காகக் கொண்டு ஆளும் தரப்புக்களால் வழங்கப்படும் மானியங்கள், இலவசங்கள், விலைக்குறைப்புக்கள், புத்தாக்க அபிவிருத்திகள் எவையும் இல்லை. சாதாரண வரவு – செலவுத் திட்டம் என்பதால், அடுத்த ஆண்டு எந்தவொரு தேர்தலும் – உள்ளூராட்சி உட்பட எதுவும் நடக்காது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவோம் என்று சொல்லிச் சொல்லித்தான் ஒவ்வொரு வரவு – செலவுத் திட்டத்திலும் பல்வேறு அறிவிப்புக்களை கடந்த பத்தாண்டுகளாக அரசுகள் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் நடைமுறையில் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை. மாறாக நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் நிலைமைதான் காணப்படுகின்றது.

உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவித்து அதனை மேம்படுத்தாத வரையில் இலங்கையின் பொருளாதார மேம்பாடு என்பது கானல் நீரே.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சில தினங்களுக்கு முன்னர், “65 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைகளை வழங்கினோம். தகுதியானவர்களின் விவரக்குறிப்பை பார்க்கும் போது, பெரும்பான்மையானவர்கள் அழகியல் பிரிவில் படித்தவர்கள் அல்லது வெளியக பட்டதாரிகளாகவுள்ளனர். இவ்வாறான நபர்கள் அரச துறைக்கு நன்மை தருவார்களா ? துரதிர்ஷ்டவசமாக அனைத்து அரசுகளும் அரச துறையில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள போதிலும், அது அரச சேவையின் வினைத் திறனுக்காகவும் பொருளாதாரத்துக்கும் நன்மையளிக்குமா?” என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

ஒவ்வொரு அரசுகளும் வாக்குகளுக்காக பட்டதாரிகளுக்கு அரச வேலை என்ற கோசத்தை முன்வைக்கின்றன. இதுவே நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை மழுங்கடிக்கின்றது. பட்டதாரிகளை உற்பத்திப் பொருளாதாரத்துக்கு ஊக்குவிக்கத் தவறுகின்றன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பட்டதாரிகளுக்கான அரச வேலை பொருளாதாரத்துக்கு எவ்வாறான நன்மையளிக்கும் என்ற கேள்வியை முன்வைத்தாலும், வரவு – செலவுத் திட்டத்தில் உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய திசை திருப்பலுக்கான திட்டங்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

கோத்தாபய அரசிடம் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் எவையும் நடைபெறவில்லை. இனியும் நடைபெறப் போவதில்லை என்பதையே இந்த வரவு – செலவுத் திட்டம் சொல்லி நிற்கின்றது.






மன்னாரில்

## கொரோனாத் தொற்று உயர்வு இறுக்கமாகும் கட்டுப்பாடுகள்

மன்னார்,நவ.13

**மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேலும் 50 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 45 பேர் அன்டிஜென் பரிசோதனைகள் மூலமாகவும், 5 பேர் பி.சி.ஆர் பரிசோதனை மூலமாகவும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்று அதிகரிப்புக்கு பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் நடமாடுதல், சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது செயற்படுதல் என்பனவே காரணங்களாக உள்ளன.

தற்போதைய காலநிலை வைரஸ் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலையாகக் காணப்படுவதால், மக்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்கள் சுகாதார அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றே நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.

கொரோனாத் தடுப்பூசியை முழுமையாகப் பெற்றவர்களே வியாபார நிலையங்கள், சந்தைகள், பொதுப் போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றை நடத்திச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்தக் கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கப்படும்.

அதேவேளை மாவட்டத்தில் டெங்குத் தொற்று பரவும் அபாயமும் உள்ளது. எனவே வீடுகள் மற்றும் சுற்றுப்புறங் களை வெள்ளம் தேங்காதவாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டும்- என்றார். (ஓ-4-60)

## வாள்வெட்டை ஒழிக்க ஆளுநர் புதிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் தலை தூக்கியுள்ள வாள்வெட்டுக் குழுக்களை இல்லாமல் செய்வதற்கு பொருத்தமான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான ஊடக சந்திப்பு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாள்வெட்டுக் குழுக்களின் இலக்குகள் இரண்டு. ஒன்று அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றார்கள். அடுத்தது தம்மை பிரபல்யப்படுத்த ஹீரோயிசம் காண்பிப்பதற்கு முயல்கின்றார்கள். வன்முறையில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் ஊடாகத் தண்டிக்க வேண்டும். ஹீரோயிசம் காண்பிப்பதற்காக வாள்வெட்டுக்களில் ஈடுபடுபவர்களை சமூக சேவைகளில் ஈடுபடுத்தி அதன் ஊடாக கௌரவிக்க வேண்டும். சமூகத்தில் அவர்கள் கௌரவிக்கப்படும்போது மனமாற்றம் ஏற்படும். இதன் ஊடாக வாள்வெட்டுச் சம்பவங்களை ஓரளவுக்காவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று நம்புகின்றேன், என்றார். (ஒ-5)

நவம்பர்
2021
வடமாகாண மரநடுகை மாதம்

“ குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.”
– தியோடர் ரூஸ்வெல்ற்

# சேதனப்பசளைகளை எவ்வாறு பயன்படுத்துவது?

## விவசாயிகளுக்கு ஆலோசனைகள்



**மன்னார்,நவ.13**

**மன்னார் மாவட்டத்தில் விவசாயிகள் காலபோக நெற்செய்கைக்கான விதைப்பை தற்போது ஆரம்பித்துள்ள நிலையில் சேதனப்பசளைப் பயன்பாடு தொடர்பில், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.**

அவரது ஆலோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

*அடிக்கட்டு பசளையாக மிகவும் கூடிய போசணை கொண்ட கூட்டெரு ஒரு ஏக்கருக்கு 500 கிலோகிராம் இட வேண்டும்.

*நெல் முளைத்து வரும் காலங்களில் திரவ உயிரியல் பசளைகளை விவசாயிகள் வீட்டில் தயாரித்து பாவிக்க வேண்டும்.

*முருங்கை இலை போன்ற உயிரியல் பசளைகளை தயாரித்து விவசாயிகள் ஆரம்பத்திலே தங்கள் வயல்களில் பாவிக்க வேண்டும்.

*விதைத்து அல்லது நாற்று செய்யப்பட்டு இரண்டு கிழமைகளுக்குப் பின்னர் நனோ நைதரசன் பசளையை 500 மில்லி லீற்றர் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

*இவற்றுடன் சேர்த்து கூட்டெருவும் வயலுக்கு இடப்பட வேண்டும்.

*500 மில்லி லீற்றர் நனோ நைதரசனை ஒரு முறை 14 லீற்றருக்கு 50 மில்லி லீற்றர் நைதரசனை தண்ணீரில் கலந்து பத்துத் தரம் ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும்.

*நாற்று நடப்பட்டோ அல்லது விதைப்பு செய்யப்பட்டோ நான்கு கிழமைகளுக்குப் பின்பு மேலதிகமாக பொட்டாசியம் குளோரைட் 25 கிலோகிராம் இடப்பட வேண்டும்.

*பொட்டாசியம் குளோரைட்டுடன் ஏற்கனவே கூறப்பட்ட அளவின்படி நனோ நைதரசனையை சேர்த்துத் தெளிக்க வேண்டும்.

*ஆறாவது கிழமைகளிலும் பொட்டாசியம் குளோரைட்டை ஒரு லீற்றர் தண்ணீருக்கு 35 கிலோகிராம் மண்ணில் இடுவதுடன் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி நனோ நைதரசனையையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

*எட்டாவது கிழமையில் பயிர் நிறம் மற்றும் இலை வர்ணச் சுட்டி என்பவற்றைப் பார்வையிட்டு அதற்கேற்றவாறு நனோ நைதரசனையை இட வேண்டும்.

*இலை வர்ணச் சுட்டியானது தொழில்நுட்பத்துக்கு உட்படுவதால் விவசாயப் போதனாசிரியர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

*நனோ நைதரசன் திரவப்பசளையை சூரியன் உதயமாவதற்கு முன்னர், அதாவது காலை 8 மணிக்கு முன்பாக அல்லது மாலை 5 மணிக்குப் பிற்பாடு வயலுக்கு தெளிப்பதன் மூலம் சிறந்த நண்மையை பெற்றுக் கொள்ள முடியும்.

*நனோ திரவப் பசளையைப் பாவிப்பதற்கு முன் போத்தலை நன்கு குலுக்கிய பின்பே பாவிக்க வேண்டும்.

*பசளை திரவப் போத்தலை உலர்ந்த இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது நலமாகும்.- என்றுள்ளது. (ஒ-4,60)

# அம்புலன்ஸ் வசதியில்லை: 335 குடும்பங்கள் பாதிப்பு


கிளிநொச்சி,நவ.13

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் வசதி இன்மையால் சுமார் 335 குடும்பங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

ஐயன்கன்குளம் கிராமத்தைச் சேர்ந்த 210 குடும்பங்களும், பழையமுறிகண்டி கிராமத்தைச் சேர்ந்த 40 குடும்பங்களும், புத்துவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்பங்களும் ஐயன்கன்குளம் மருத்துவமனையை நம்பியுள்ளன.

2019 ஆம் ஆண்டு ஐயன்கன்குளம் மருத்துவமனையின் அம்புலன்ஸ் திருத்தத்துக்கெனக் கொண்டுசெல்லப்பட்டது. அந்த வண்டி திருப்பி ஒப்படைக்கப்படாத நிலையில், மருத்துவமனையை நம்பி இரவு வேளைகளில் செல்வோர் 15 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார மருத்துவமனைக்குச் செல்லவேண்டியுள்ளது.

எனவே மருத்துவமனைக்குரிய அம்புலன்ஸ் வண்டியை மீண்டும் மருத்துவமனைக்கே வழங்குவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-4,13)



# சிமெந்துத் தட்டுப்பாடு அடுத்த மாதம் சீராகும்

கொழும்பு, நவ.13

நாட்டில் நிலவும் சிமெந்துத் தட்டுப்பாட்டை அடுத்த மாத நடுப்பகுதிக்குள் சீராக்க முடியும் என்று சிமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் வாரங்களில் சிமெந்து அடங்கிய கப்பல்கள் நாட்டை வந்தடையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக கட்டட நிர்மாணத் துறையினர் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொர்டுத்துள்ளனர். சிமெந்தைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதை அவதானிக்க முடியந்தது. (எ-இ)




# வெள்ளத்துக்கு மத்தியில் சுதுமலையில் சூரன்போர்

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணத்தில் கனமழை பெய்தநிலையில், கோவில்கள் பலவற்றிலும் மழைக்கு மத்தியில் சூரன்போர் நடைபெற்றது.

சுதுமலை அம்மன் கோவிலில் கனமழை பெய்து வெள்ளம் சூழ்ந்து காணப்பட்ட நிலையிலும், வெள்ளத்துக்கு மத்தியில், சூரன்போர் உற்சவம் நடைபெற்றது. (கு-125)



மன்னார் மாவட்டத்தில் பேசாலை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவ சூரசம்ஹார நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.(ஒ-4,60)

# அறநெறிப் பாடசாலை ஆழியவளையில் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

ஆழியவளை கிராமஅலுவலர் பிரிவில் சைவச்சிறுவர்களுக்கான ஸ்ரீஇராஜ கணபதி அறநெறிப்பாடசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் சிவகுருநாத ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக சிவசேனை செயலாளர் பி.ஸ்ரீந்திரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான நாள் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சிவசேனை மற்றும் தாழையடி ஸ்ரீ இராஜ கணபதி ஆலய நிர்வாகத்தினர் இணைந்து பாடசாலையை ஆரம்பித்தனர். (ஒ,4)



# அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக வவுனியாவில் பரவலாக சுவரொட்டி




வவுனியா, நவ. 13

அரசின் செயற்பாடுகளுக்கும், யுகதனவி மின் ஒப்பந்தத்துக்கும் எதிராக வவுனியாவில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அந்தச் சுவரொட்டிகளில் மின்சாரம் எண்ணெய் சுயாதிபத்தியத்தை காட்டிக்கொடுக்கும் திருட்டு ஒப்பந்தத்தை ரத்து செய், அமெரிக்க -சீன - இந்திய மரணப்பொறியில் மக்களைச் சிக்கவைக்கும் ஏகாதிபத்திய சார்பு ஆட்சிக்கு எதிராவோம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் மற்றும் முன்னிலை சோஷலிஸக் கட்சி என்பன மேற்படி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## திரு. சிவசுப்பிரமணியம் மணிவண்ணன்

(B.A.Dip.in Edu. SLPS - I அதிபர்)

**சேவை காலம் : 18.02.1999 - 13.11.2021**

**சேவை விவரம்:**

ஆசிரியராக

| | |
|---|---|
| யா/ சில்லாலை றோ.க.த.பாடசாலை | - 18.02.1999 - 09.07.2001 |
| யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை | - 10.07.2001 - 02.05.2011 |
| யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தவித்தியாலயம் | - 03.05.2011 - 04.06.2012 |

அதிபர்

| | |
|---|---|
| யா/ அராலி வள்ளியம்மை ஞாபகர்த்த வித்தியாலயம் | - 05.06.2012 - 14.11.2012 |
| யா/ மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் | - 15.11.2012 - 04.03.2018 |
| யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் | - 08.03.2018 - 12.11.2021 |

இருப்பதிரண்டு வருடங்கள் கல்விப்பணியாற்றி இன்று (13.11.2021) சனிக் கிழமை ஓய்வுபெறும் எமது பாடசாலையின் அதிபர் அவர்களின் ஓய்வுகால வாழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : 13.11.2021

பாடசாலைச் சமூகம்

**யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் பண்டத்தரிப்பு**


# சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸாரில்லை

முல்லைத்தீவு,நவ.13

வட்டுவாகல் தொடக்கம் சாலை வரையான கிராமங்களில் சட்ட விரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் உதவி அவசியம் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு, பனையடி, வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை, மாத்தளன் ஆகிய பகுதிகளுக்கு பொலிஸார் வருகை தர வேண்டும்.

வட்டுவாகல் தொடக்கம் சாலை வரையான கிராமங்கள் 20 கிலோ மீற்றர் நீளமான பின்தங்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசங்களில் மணல் அகழ்வு மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்தப் பகுதிக்கு பொலிஸார் வருகை தராத காரணத்தால், சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எவ்வித அச்சமுமின்றி செயற்படுகின்றனர்.

சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டுமாயின், பொலிஸார் குறித்த பிரதேசங்களுக்கு வருகை தரவேண்டும்-என்றுள்ளது.

(ஒ-4-13)


**பிரத்தியேக வகுப்பு**
**GROUPS CLASS**
தரம் - 9 தொடக்கம் தரம் 11 வரை
வரலாறு
குடியியல்
புவியியல்
விவசாயம்
**A/L**
வரலாறு
இந்துசமயம்
I.C.T
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
**076 645 9287**
(CS 17990) (3/6)



**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) - கொடிகாமம்**

**அறிவித்தல்**

சங்க கூட்டுறவுநகர் (CO-OP CITY) நிலையத்தில் இருந்து கிளைமுகாமையாளர் விலகியுள்ளமை தொடர்பானது

எமது சங்க கூட்டுறவுநகர் (CO - OP CITY) நிலையத்தில் கிளை முகாமையாளராக கடமை புரிந்த வி.விஜிதன் 01.11.2021 திகதியில் இருந்து விலகியுள்ளார் என்பதையும் அத்துடன் ஒப்பந்த விற்பனை உதவியாளர் T.ஜெசிந்தனும் விலகியுள்ளார் என்பதையும் அறியத்தருகின்றேன். எனவே இதன் பின்னரான சங்க கொடுக்கல், வாங்கல் தொடர்பாக ஏற்படும் விளைவுகளுக்கு சங்கம் பொறுப்பாளியாகாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(cr.35872) (2.6) **பொதுமுகாமையாளர்**



# மணிவிழா வாழ்த்து




எமது பிரான்பற்று கலைமகள் வித்தியாலத்தில்

05.03.2018 தொடக்கம் அதிபராக கடமையாற்றிய மதிப்புக்குரிய

## திரு.சிவசுப்பிரமணியம் மணிவண்ணன்

(B.A. PGDE, SLPS - I)

**அவர்கள் இன்று (13.11.2021) சனிக்கிழமை ஓய்வுபெறுகின்றார்**

எமது பாடசாலை வரலாற்றின் காலச்சுவட்டில் இவரின் சேவைக்காலம் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டியதொன்று இவரின் சேவைக்காலத்தில் பாடசாலையின் பௌதிகவளத் தேவைகள் மிகச் சிறப்பாக சீர்செய்யப்பட்டு. கல்வி வளர்ச்சியில் உயர் அடைவு மட்டத்தை அடையச்செய்து எமது பாடசாலையை நிலை நிறுத்தி மகத்தான சேவைகளை ஆற்றியுள்ளார்.

இன்று தனது இல்லத்தில் மணிவிழா கொண்டாடிக்கொண்டிருக்கும் **திரு. சிவசுப்பிரமணியம் மணிவண்ணன்** அவர்கள் தனது அகவை அறுபதை பூர்த்திசெய்து தனது கடமை ஓய்வை அடைகின்ற வேளையில் அவர் நோய் நொடியின்றி நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரான்பற்று மக்கள் சார்பாகவும் பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம் லண்டன் சார்பாகவும் மனமார வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்:**

| சேவைக் காலம் | பாடசாலை | பதவி |
|---|---|---|
| 1999.02.18 - 2001.07.09 | யா/ சில்லாலை றோ.க.த.பாடசாலை | ஆசிரியர் |
| 2001.07.10 - 2011.05.02 | யா/ பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க பாடசாலை | ஆசிரியர் |
| 2011.05.03 - 2012.06.04 | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தவித்தி. | ஆசிரியர் |
| 2012.06.05 - 2012.11.04 | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகர்த்த வித்தி. | பதில் அதிபர் |
| 2012.11.05 - 2012.11.14 | யா/ அராலி வள்ளியம்மை ஞாபகர்த்த வித்தி. | அதிபர் |
| 2012.11.15 - 2018.03.04 | யா/ மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் | அதிபர் |
| 2018.03.05 - 2021.11.13 | யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் | அதிபர் |

வாழ்த்துவோர்:

**பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம் (London)**

Congratulations

(cs.17999) (2.6)

## பிரத்தியேக வகுப்புகள்

தரம்: 9 - 11 வரை தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாகவோ நேரில் வந்து விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் கற்பிக்கப்படும்

தொடர்புகளுக்கு:

(cs.18007)(2.6) 075 049 7577

## மணமகள் தேவை

யாழ் மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட 1984, பரணி நட்சத்திரம், மேட இராசியில் பிறந்த (கி.பா.57) சுயதொழில் Business புரியும் மணமகனுக்கு (உயரம் : 6 அடி) பொருத்த மான மணமகள் தேவை. (CS 18005A)(3.6)

தொடர்பு: 077 851 7575

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ் நகருக்கு அண்மையிலுள்ள வீடு ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0770332994 (CS 1804) 1/6


# சுகாதாரத் தொண்டர்கள் தேர்வில் முறைகேடில்லை

## முன்னாள் செயலாளர் உறுதி

**வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் நேர்முகத் தேர்வில் முறைகேடுகள் இடம்பெற்றால் ஆதாரத்துடன் நிரூபிக்கும் பட்சத்தில் எவர் முன்னிலையிலும் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் பதில் செயலாளர் எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்றது. குறித்த நேர்முகத்தேர்வானது மிகவும் வெளிப்படைத் தன்மையுடன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் சகல மாவட்டங்களிலும் இடம் பெற்றது. நேர்முகத்தேர்வு முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் அதில் முறைகேடுகள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர்.


## மணமகன் தேவை

யாழ் மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட 1993, பூசம் நட்சத்திரம், கடக இராசியில் பிறந்த (கி.பா.60) சுயதொழில் புரியும் மணமகளுக்கு (உயரம் : 5 அடி, 4 அங்குலம்) பொருத்தமான மணமகன் தேவை. (CS 18005B)(3.6)

தொடர்பு: 077 851 7575


நியமனத்தை வழங்கும் போது அரச நியமனம் தொடர்பான கொள்கையின் அடிப்படையிலும், அப்போதைய ஆளுநரின் அதிகாரங்களுக்கு உட்பட்டும் நியமனக் கடிதங்கள் தகுதியானவர்களுக்கு அனுப்பப்பட்டன.

நியமனத்தில் முறைகேடு இருக்குமானால், இரண்டு வருடங்களாக நடவடிக்கை எடுக்காததோடு, வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களை ஏன் இரத்துச் செய்யவில்லை? ஏன் இதுவரை எவரும் ஆதாரங்களுடன் முறையிட வில்லை?

சுகாதாரத் தொண்டர்கள் நியமனத்தில் அவர்களுடன் நேர்முகத்தேர்வுக்கு தோற்றியவர்களுக்குத் தெரியும் எவ்வாறான அடிப்படையில் என்னென்ன விடயங்களுக்கு புள்ளி வழங்கப்பட்டதென்று.

சுகாதாரத் தொண்டர் நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதென்றால், ஆதாரங்களுடன் முன்வரட்டும். அதற்கு எவர் முன்னிலையிலும், எப்போது வேண்டுமானாலும் பதிலளிக்கத் தயாராக இருக்கின்றேன்- என்றார். (ஒ-4-159)


## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்
## வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்கான பெறுகைகள் -2022

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கு மூல உணவுகளை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

விபரங்கள் ஆதார வைத்தியசாலை - தெல்லிப்பளை மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை - மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை - முல்லைத்தீவு

| விபரங்கள் | | ஆதார வைத்தியசாலை- தெல்லிப்பளை | மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி | மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா | மாவட்ட பொது வைத்தியசாலை - மன்னார் | மாவட்ட பொது வைத்தியசாலை - முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|
| குறியீட்டு இலக்கம் | | NP/21/05/Diet/ BHTEL/2022 | NP/21/05/Diet/ DGHKOC/2022 | NP/21/05/Diet/ DGHVAV/2022 | NP/21/05/Diet/ DGHMAN/2022 | NP/21/05/Diet/ DGHMUL/2022 |
| பெறுகை ஆவணங்களை பெறும் முகவரி | | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 021 222 6253 | மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி A9 வீதி, கிளிநொச்சி 021 228 4111 | மாவட்ட பொது வைத்தியசாலை வவுனியா, A9வீதி வவுனியா 024 222 8094 | மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார் 023 225 1550 | மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு 021 206 1423 |
| மீளளிக்கப்படாத வைப்பு | | Rs. 3500/= | Rs. 3500/= | Rs. 4000/= | Rs. 3500/= | Rs. 3500/= |
| Cate gory | Type of Food | பெறுகைப் பாதுகாப்புப் பிணைத் தொகை (ரூபா) | | | | |
| A | மரக்கறி வகைகள் | 21,000.00 | 24,000.00 | 42,000.00 | 18,000.00 | 20,000.00 |
| B | பழவகைகள் | 57,000.00 | 9,000.00 | 31,000.00 | 11,000.00 | 37,000.00 |
| C | இறைச்சி, முட்டை, மீன் | 39,000.00 | 24,000.00 | 75,000.00 | 49,000.00 | 35,000.00 |
| D,F | உலர் உணவு,, பைக்கட், ரின், போத்தலில் அடைக்கப்பட்ட உணவுகள் | 87,000.00 | 86,000.00 | 139,000.00 | 62,000.00 | 84,000.00 |
| E | பேக்கரி உணவுகள் | 5,000.00 | 12,000.00 | 11,000.00 | 10,000.00 | 5,000.00 |
| G | எரிவாயு, விறகு | 10,000.00 | 12,000.00 | 11,000.00 | 6,000.00 | 6,000.00 |
| முழு வகைகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் | | 219,000.00 | 167,000.00 | 309,000.00 | 156,000.00 | 187,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன், மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை மேலே குறிக்கப்பட்ட முகவரியிலே வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கிலமொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை மேலே காட்டப்பட்ட முகவரிகளில் வேலைநாட்களில் 15 நவம்பர் 2021 ஆம் திகதி தொடக்கம் 29 நவம்பர் 2021 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மேலே தெரிவிக்கப்பட்ட தொகையினை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 30 நவம்பர் 2021 ஆம் திகதி 10:00 மணிக்கு முன்பதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம், வடமாகாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டம் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 22 நவம்பர் 2021 ஆம் திகதி காலை 10:00 மணிக்கு நடைபெறும். வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர்,திணைக்களபெறுகைக் குழு (பெரிது)**
**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.**

தொ.பே - 021-222-0811, 021-222-0812, 021-222-0839
தொலைநகல்: 021-222-0818, 021-221-7905 மின்னஞ்சல்: capdhsnp@gmail.com

(cr.35867)(2.6)


# மின்தடை


யாழ்ப்பாணம், நவ.13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை ஞாயிறு காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். மாவட்டத்தில் கொமர்ஷல் வங்கி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய் சந்தை மேதர் மானிப்பாய் , கார்கில்ஸ் மானிப்பாய், அம்மன் வீதி கந்தர்மடம், ஆரியகுளம் பருத்தித்துறை வீதி, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி பிஸா ஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஸரான் லிவீதி ஆரியகுளம் சந்தி, யாழ் மருத்துவமனை பலாலி வீதி, அவுனோர் (பிவிரி) லிமிடெட், தம்றோ, நொதேர்ன் மருத்துவமனை, சூரிய உதயம் (வீனஸ் வைத்தியசாலை), பி.சி.சி.ஏ. எஸ் கல்லூரி, பலாலி வீதி சிவன் அம்மன் வீதி சந்தி, கொமர்ஷல் வங்கி பலாலி வீதி, பனிக்கர் லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி சந்தை, வெளிவாரி பட்டப்படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கறுப்பிக்குளம், கோவிந்தன்கடை சந்தி, மாயவனூர், பன்னங்கண்டி, இராமநாதபுரம், சின்னச்சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி, வட்டக்கச்சி, நன்னீர் மீன் உற்பத்தி, இரணைமடு, வட்டக்கச்சி பண்ணை விமானப்படை ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம் மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா டெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி மைதானம், மன்னார், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி, மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படவுள்ளது என இலங்கை மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நினைவஞ்சலியும் நயப்பும் மெய்நிகர் வீடியோ நிகழ்வு



வைத்திய கலாநிதி

## சின்னத்துரை கதிரவேற்பிள்ளை

ஓய்வுபெற்ற மாவட்ட வைத்திய அதிகாரி,
ஆதார வைத்தியசாலை, மந்திகை

**16.11.1933 - 13.08.2021**

**காலம்: சனிக்கிழமை 13 நவம்பர் 2021**

**நேரம்:**
UK 12.00 NOON / SL - COLOMBO 5:30 PM
AUS - SYDNEY 11: 00 PM / US - NEW YORK 7:00 AM
CAN - TORONTO 7:00 AM

Zoom id : 548 584 4813
Password: 127113

(cs 417996) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.05.1942

மறைவு
26.10.2020

## அமரர் கிருஷ்ணபிள்ளை அருணகிரிராசா

திதி : ஐப்பசி பூர்வபக்க தசமி

வாழ்ந்து எங்களை வாழவைத்த திலகமே
சிந்தித்து செயலாற்றும் திறன் கொண்டவனே
உன் முகம் இழந்தாலும் முகவரி இழக்காது
எரித்த உன் சாம்பலிலும் எம்
அன்பு உள்ளம் துளிர்ந்து நிற்கும்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை
செய்கின்றோம்

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!**

குடும்பத்தினர்

(CS 41052) (3.6)

---

சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
01.01.2022 முதல் 31.12.2022 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி

# அறிவித்தல் - 2022

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 15.11.2021 – 29.11.2021**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 30.11.2021 மு.ப 10.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 30.11.2021 மு.ப 10.30 மணி**

| இல. | கச்சாய் உப அலுவலகம் | கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் ( மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம்; |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம். | 12,628,000.00 | 126,300.00 | 750.00 |
| 2 | கொடிகாமம் மீன் சந்தை | 1,459,000.00 | 14,600.00 | 750.00 |
| 3 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 872,600.00 | 8,800.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,230,000.00 | 12,300.00 | 750.00 |
| 5 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 100,500.00 | 1,100.00 | 750.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 81,600.00 | 900.00 | 750.00 |
| 7 | களஞ்சிய அறை இல - 01 | 27,500.00 | 500.00 | 750.00 |
| 8 | களஞ்சிய அறை இல - 02 | 26,200.00 | 500.00 | 750.00 |
| 9 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 15,200.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் -01 | 18,600.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 02 | 21,000.00 | 500.00 | 750.00 |
| 12 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் - 03 | 16,800.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 13 | வரணி பொதுச்சந்தை | 65,600.00 | 700.00 | 750.00 |
| 14 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6,600.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 15 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 258,200.00 | 2,600.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 16 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 73,200.00 | 800.00 | 750.00 |
| 17 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,500.00 | 500.00 | 750.00 |
| 18 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,800.00 | 500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 30,400.00 | 500.00 | 750.00 |
| 20 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 16,400.00 | 500.00 | 750.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | | |
| 21 | நாவற்குழி பொதுச்சந்தை | 32,300.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

01. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 15.11.2021 தொடக்கம் 29.11.2021 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.

02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.

03. கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)

04. 30.11.2021 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமூகமளிக்கலாம்.

05. **இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.**

06. **கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.**

07. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.

08. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.

09. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "**தவிசாளர் செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.


11. **கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.**

12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.


**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**13.11.2021.**


Cr.5900)(2.6)

# சிம்மாசனம் ஏறிய சிங்கம் ஒன்று உறங்கியது



## ஸ்தபதி செல்லப்பா - சிவரத்தினசிங்கம் (குட்டி)







யாழ் மயிலிட்டியூரை பிறப்பிடமாகவும், நீர்வேலியை வதிவிட மாகவும் கொண்டு வாழ்ந்த மருவிலாட சங்கிலித் தவண்டை ஆச்சாரிக் குருக்களின் மரபினனும், கலாலயா ஷேத்திரத்தின் கவின் நிறை சிற்பக்கலைஞனுமான சில்பகலா வித்தகன் ஸ்தபதி செல்லப்பா - சிவரத்தினசிங்கம் (சிற்பாச்சாரியார்) அவர்கள் கடந்த (09.11.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (பிள்ளையார் ஆச்சாரியார்) இரத்தினம் அம்மையார் தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான கலைஞர் திலகம் ஸ்தபதி நவரத்தினம் தவமணிதேவி தம்பதிகளின் தலை மருமகனும், செல்வாம்பிகையின் அன்புக் கணவரும், கவிஞர், ஸ்தபதி சண்முகநாதன், ஆச்சாரியார் தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்திரன் (கனடா), ஜெயந்திரன், நிவாசினி, யதுர்சிகன் ஆகியோரின் குட்டிச் சித்தப்பாவும், செல்வேந்திரன், செல்வசிறி, செல்வமனோகரி, செல்வசுதன்(கனடா) ஆகியோரின் குட்டி மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக்கிரியைகளிற்காக மயிலிட்டி கொற்றாவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.




**தகவல் : குடும்பத்தினர்**

**தற்காலிக முகவரி**
**கதிர்காமர் கோவிலடி,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**077 437 1612**
**077 338 5353**

**நிரந்தர முகவரி**
**கலைமகள் மகாவித்தியாலய**
**அருகாமை,**
**மயிலிட்டி. (கலாலயா)**

(CS 18003) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20
06
1954



மறைவு
11
11
2021

## சுப்பிரமணியம் சிவலோகநாதன்

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவலோகநாதன் அவர்கள் கடந்த (11.11.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சுந்தரம் தம்பதியரின் மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், தர்சிகா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - கோப்பாய்) அவர்களின் அன்புத் தந்தையும், பிரசாந் (Quantity Surveyor, Yashi Holdings Pvt. Ltd) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற விநாசித்தம்பி சரஸ்வதி தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரங்கிரிநாதர், விசுவநாதன், திருஞானசம்பந்தர், சண்முகநாதன், அம்பிகாதேவி, காலஞ்சென்ற ரவீந்திரன் ஆயோரின் சகோதரனும், காலஞ் சென்ற நாகராசா, காலஞ்சென்ற ருக்மணிதேவி, தர்மரத்தினம், புவனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், உதயமாலினி, சந்திரகுமார், சசிகுமார், சாந்த குமார், பவனிதா, ஆதவன், தினேஷ், நிருத்திகா, கவிதா, கயல்விழி, தனலக் ஷன், கிசானி, ப்ரித்தி, ரிஷி, நவீன் ஆகியோரின் மாமாரும், உஷாங்கினி, நிஷாலினி, வினோதினி, தருணி ஆகியோர் அன்னாரின் பெறாமக்களும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 18015) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம்
24
06
1936



மறைவு
12
11
2021

## சிவபாக்கியம் பாலசிங்கம்


காரைநகர் இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாலசிங்கம் நேற்று (12.11.2021) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பார்வதி தம்பதிகளின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் பாலசிங்கத்தின் (ஓய்வு நிலை உதவி அர சாங்க அதிபர்) அன்பு மனைவியும், ஞானாம்பிகை, கமலாம்பிகை (ஆசிரியர், காரை நகர் இந்துக் கல்லூரி), கனகாம்பிகை (பிரான்ஸ்), சௌந்தராம்பிகை (ஜேர்மனி), தனலட்சுமி, மோகனாம்பாள் (கனடா), நேசமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவமணி (கனடா), காலஞ் சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சிவகலை, சிவப் பிரகாசம் ஆகியோரின் சகோதரியும், சிவசோதி, லிங்கேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரி யர், காரைநகர் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற கெங்காதேவன் (பிரான்ஸ்), மற்றும் விஜயசிங்கம் (ஜேர்மனி), சிவானந்தன், உருத்திரலிங்கம் (கனடா), அருள்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அருட்குமரன், ஜனனி, ரமேஸ், சிவப் பிரியன், அபிராமி, சதீஸ்,தினேஸ், கீதவேணி, கஜனி, ஜீவினி, பிரதாப், வனிதா, தனுஷன், மயூரன், மயூரி, கஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கிருத்திக், டஷ்வந்த் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இடைப்பிட்டி காரைநகரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைப்பிட்டி, காரைநகர்.
077 356 2636
077 675 1453
077 459 9169
தகவல் :
குடும்பத்தினர்
(CS 18010) (3/6)

# மரண அறிவித்தல்



## சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் சபாரத்தினக்குருக்கள்

### (101 அகவை கண்ட சிவாச்சார்ய மணி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட உரும்பிராய் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவில் ஆதீன கர்த்தாவும், இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்மன் கோவில், கோண்டாவில் இணுவில் காரைக்கால் சிவன் கோவில் முன்னை நாள் பிரதம குருவுமான சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் சபாரத்தினக்குருக்கள் நேற்று முன்தினம் (11.11.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தீஸ்வரக்குருக்கள் அன்னம்மா தம்பதியரின் ஜேஷ்ட புத்திரனும், ஐயாத் துரைக்குருக்கள் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புவனம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரக்குருக்கள், இராஜேஸ்வரி, உருக்குமணி, மற்றும் இராசமணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும். ரஞ்சித பூஷணம் (கொழும்பு), சிற்சபேஸ்வரி (இணுவில்), சிவஸ்ரீ சபாபரமேஸ்வரக்குருக்கள் (பிரதம குரு மலேசியா கோலாலம்பூர் - ஸ்கொட்றோட் ஸ்ரீகந்தசுவாமி கோவில்), சிவஸ்ரீ சபா மகேஸ்வரக் குருக்கள் (பிரதம குரு லண்டன் லூசியம் சிவன் கோவில்), சிவஸ்ரீ சபா மங்களேஸ்வரக்குருக்கள் (வெள்ளவத்தை பாலா ஐயா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்வர்க்கீய ஸ்ரீ சிதம்பரேஸ்வரக் குருக்கள் ஸ்வர்க்கீய ஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், ஜெயஸ்ரீ (மலேசியா), ரஞ்சிதம் (லண்டன்), அனந்தலட்சுமி (வெள்ளவத்தை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனந்தலட்சுமி, நித்திய கல்யாணி, ரவிச்சந்திர சர்மா, கௌரிமனோகரி, நித்தியலட்சுமி, சரவணபவக்குருக்கள், சுவாமி நாதக்குருக்கள், கருணாகர விசாகசர்மா, ஸ்ரீவத்ஸசர்மா, பிரணவசர்மா, பிரவீனா, பிரதீபசர்ம ஆகியோரின் அன்புப் பேரனும், பிரவீனா, பிரதீபசர்மா, சுசாந்தனசர்மா, சுதர்சனசர்ம வைஷ்ணவி, சங்கீர்த்சர்மா, ஹரீஸ்சர்மா, ஈவரசர்மா, பர்வதா, சாத்வீகசர்மா, சர்வான லோஜனசர்மா, சதுராங்கசர்மா, தத்வஜசர்மா, அக்ஷயசர்மா ஆகியோரின் பூட்டனு டிவ்யந்சர்மாவின் கொள்ளுப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.11.2021) சனிக்கிழமை இல.591, காலி வீதி, மவுன லவினியாவிலுள்ள மஹிந்த மலர்ச்சாலையில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 ம வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.20 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உரும்பிராயிலுள்ள அன்னாரின் பரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பை இந்து மயா திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் கோவிலடி,
உரும்பிராய் மேற்கு.

தகவல்: குடும்பத்தினர்
077 088 3830, 077 198 5
07[illegible] [illegible]75 9523

(CS 18008) (3/6)

# மழையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி



யாழ்ப்பாணம், நவ.13

மழையால் பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு புளொட் அமைப்பின் லண்டன் கிளையின் அனுசரணையில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கஜதீபன் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

வெளிமாவட்டங்களில் இருந்து பரீட்சைக்காக வருகை தந்து விடுதி களில் இடம்பெயர்ந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே இவ்வாறு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ச-125)

# குடை திடீரென மடிந்ததால் விபத்தில் சிக்கிய சிறுவன்

கிளிநொச்சி,நவ.13

துவிச்சக்கர வண்டியில் குடை பிடித்துப் பயணித்துக் கொண்டிருந்த சிறுவன், காற்றுக்கு குடை திடீரென மடிந்தவுடன் முன்னால் பயணித்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்து பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் சந்திக்கருகாமையில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன், துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த சிறுவன் மோதுண்டு விபத்துக் குள்ளாகியுள்ளார்.

விபத்தில் மூக்குப்பகுதியில் காயமடைந்த சிறுவன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-113)

## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் -2022

சபையானது 2022 ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்கு வதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருட்கள்**

1.1. காகிதாதி எழுதுபொருட்கள்
1.2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
1.3. சித்த மருத்துவ மருந்துகள்
1.4. நூலகங்களுக்கான நூல்கள்
1.5. துணி வகைகள்
1.6. கட்டட பொருட்கள் (சீமெந்து ஓடுகள் கம்பிவகைகள்)
1.7. கற்கள் மணல்
1.8. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
1.9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
1.10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
1.11. மின்வழங்கு பொருட்கள், மின்பாவனை பொருட்கள்
1.12. எரிபொருட்கள் உராய்வு நீக்கி
1.13. இரும்பு பொருட்கள்
1.14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
1.15. பனைமரங்கள், சலாகைகள்
1.16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
1.17. கணணி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
1.18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
1.19. பாதணிகள், தோற்பொருட்கள், மழை அங்கிகள்
1.20. அலங்காரப் பொருட்கள்
1.21. இலத்திரனியல் பொருட்கள்

**2. சேவைகள்**


2.1. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2.2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
2.3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
2.4. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
2.5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
2.6. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
2.7. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
2.8. வாகனங்கள் சுத்திகரிப்பு
2.9. கோலவுடை தைத்தல்
2.10. கணணி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
2.11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
2.12. வீதி விளக்குகள் பொருத்துதல்
2.13. மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
2.14. வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
2.15. கழிவகற்றல் சேவை (Gully emptier service)
2.16. சுத்திகரிப்பு சேவை
2.17. திண்மக்கழிவு தரம் பிரித்தல்
2.18. வீதியோரம், வடிகால் பராமரிப்பு சேவை

பதிவின் பொருட்டு வியாபாரப்பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருட்கள் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் 15.11.2021 ம் திகதியிலிருந்து 16.12.2021 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2022"** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமோ **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, இல 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் 17.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-222-2700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**ப.மயூரன்**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை.**
13.11.2021

(cr.35876)(2.6)

## மரண அறிவித்தல்



### வுளோறிமன்ட் சவரிமுத்து

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வுளோறிமன்ட் சவரிமுத்து கனடாவில் நேற்று முன்தினம் (11.11.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்து அக்கினேஸ் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான, அல்பிறெட்யோசவ், அலோஷியஸ், பற்றிமா, ராசா, அன்ரன் பிரான்சிஸ் மற்றும் யோன் ஒவ்ஆர்க் (கனடா) ஜெம்மா ஜஸ்மின் (சில்லாலை) அருட்தந்தை பீற்றர் பொன்கலன் ஜிற்றேந்திரன் (O.M.I கனடா), எமில் ஜெகநாகன் (பிரான்ஸ்) இமெல்டா ஜொய்ஸி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியிலிருந்து 9 மணி வரை Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham on Canada வில் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (15.11.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு Out Lady of Good Health 131 Birchmount Road Scarborough இல் அமைந்துள்ள ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**201/1, 3ஆம் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம் .**

**தகவல் :**
**சகோதரி**

(CS 41061) (3/6)

## மரண அறிவித்தல்

### திரு நடராஜா இராஜேந்திரம்



**தோற்றம்:** **19.09.1951**

**மறைவு** **10.11.2021**

யாழ் பருத்தித்துறையை பிறப்பிடமாக வும் திருகோணமலை, ஒஸ்லோ, நோர்வே ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட திரு. நடராஜா இராஜேந்திரம் அவர்கள் 10.11.2021 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னம்பலம்- இளைய பிள்ளை தம்பதியரின் பாசமிகு மரு மகனும், ராஜி (இராசம்மா) அவர்களின் அன்புக் கணவரும், Dr. சோபனா, சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஐங்கரன், செந்தூரன் ஆகி யோரின் அன்பு மாமனாரும் சமந்தாவின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான இராசமலர், செல்வராணி, மற்றும் மல்லிகா (கொழும்பு), சாந்தி (கொழும்பு), மாலா (லண்டன்), வசந்தாதேவி (ஜேர்மனி), ரவி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர், நாகேஸ்வரி, இராசேந்திரம் (உப தவிசாளர், வலி வடக்கு பிரதேச சபை), சின்னத்துரை (மாதகல்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), ஸ்ரீகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (15.11.2021) திங்கட்கிழமை Oslo Norway இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ராஜி (மனைவி) - 004722301213**
**மல்லிகா (சகோதரி) - 0772511064**
**இராசேந்திரம் (மைத்துனர்) - 0776443154**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18012) 1-6

*30 ஏக்கரில்...*
ஏக்கரில் கடலட்டைப்பண்ணை அமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சு அனுமதியளித்துள்ளது என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, தமது சங்கத்தினரை ஏமாற்றியே இந்தச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இந்தச் செயற்பாட்டின் பின்னணியில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச சபை உறுப்பினரொருவர் செயற்படுகின்றார் என்றும் குறித்த பகுதியிலுள்ள சிறீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தினர் விசனம் தெரிவித்தனர்.
குறித்த கடலட்டைப்பண்ணை அமைக்கப்படுமானால் இந்தப்பகுதியிலுள்ள கடல் வளங்கள் முழுமையாக அழிக்கப்படலாம். அவ்வாறான நிலைமை வந்தால், தாங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்வதனைத் தவிர வேறு வழியில்லை என்றும் மீனவ சங்கத்தினர் அச்சம் தெரிவித்தனர் .
வேலணை பிரதேச சபையினரின் எந்த வித அனுமதியுமின்றி நடைபெறுகின்ற இந்தச்செயற்பாடு குறித்து வேலணை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், செல்லப்பா பார்த்தீபன், பிலிப் பிரான்சிஸ், சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோர் நேற்று நேரில்சென்று பார்வையிட்டனர். மீனவர்களின் கருத்துக்களையும் செவிமடுத்திருந்தனர். அத்தோடு ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), தீவக சிவில் சமூக முக்கியஸ்தர் கருணாகரன் குணாளன் போன்றவர்களும் குறித்த பகுதிச்சென்று நிலைமையை அவதானித்துள்ளனர். (து)



## தளபாடங்கள் அன்பளிப்பு

கொடிகாமம், நவ.13
ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தினரால் கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு தளபாட உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.
சங்கச் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க பிரிட்டனில் வசிக்கும் சு.மோகனதாசன் என்பவரின் நிதியனுசரணையில் 13 ஆயிரம் ரூபா பெறுமதியான மேசையும் 6 கதிரைகளுமே இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (ச-159)

## விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி, நவ.13
சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஏ - 9 வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள், வீதியோரத்தில் நடந்து வந்த முதியவரை மோதிவிட்டு சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்றது.
இந்த விபத்தில், 73 வயது முதியவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-ரி1 -9)



நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் கந்த சஷ்டி உற்சவத்தின் சூரன்போர் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ஒ-4-159)


# ஶ்ரீவெங்கடேஸ்வரா ஶ்ரீ அபிராமி
# திருமண மாலை
## முன்கட்டணம் $30 Dollers

Canada, France, Germany, Italy, U.K, Switzerland, India, Sri Lanka
நாடுகளில் உள்ள பட்டதாரிகள், Divorce ஆனவர்களோடு எல்லா வகுப்பினர்கள் உட்பட 300 ற்கு மேற்பட்டஜாதகங்கள் எம்மிடம் உள்ளன

திருமண சேவை (Wedding)

கனடா
U.K
ஜேர்மன்
France
Switzerland
டென்மார்க்
ஒஸ்ரேலியா
இலங்கை
இந்தியா


இந்த நாடுகளில் எங்கள் சேவை மூலமாக பல திருமணங்கள் நிறைவேற்றி வைத்துள்ளோம்.
கனடாவில் இருந்து வருகைதந்துள்ள ராம் அலெக்ஸாண்டர் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு தமிழ் பகுதிகளுக்கு நேரடியான விஜயம்.
என்னிடம் பணம் கொடுத்தவர்கள் ($30) டொலர் உடன் தொடர்பு கொள்ளவும், (வெளி நாட்டிற்கு) உள்ளூர்களுக்கு (2000 முற்பணம்)

படித்த பெண்கள், ஆண்கள் உட்பட 300 ஜாதகங்கள் படத்துடன் எம்மிடம் இருக்கிறன. Divorce ஆண், பெண்களும் எங்களிடம் இருக்கின்றது. மன்னார், யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, உட்பட Canada மேற்குறிப்பிட்ட வெளிநாடுகள் உட்பட.
தற்போது மன்னார், வவுனியா.
Canada - 4167208975
Whatsapp - 6473894130
இலங்கை : 076 0186822
: 076 2719112

(CR 5901) 1-6


# மரண அறிவித்தல்

## நவரத்தினம் தியாகலிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் தியாகலிங்கம் அவர்கள் நேற்று (12.11.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நவசோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கணதீபன் (சட்டத்தரணி) அவர்களின் அன்புத் தந்தையும், ஜெனனியின் பாசமிகு மாமனாரும், விஜயரெட்ணம், லோகேஸ்வரி, காலஞ்சென்ற துரைரெட்ணம் மற்றும் செல்வரட்னேஸ்வரி, திலகேஸ்வரி, காலஞ்சென்ற இராசரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பாவதி காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் ஜெசி, சச்சிதானந்தன், இராமச்சந்திரன் காலஞ்சென்றவர்களான குமாரத்தியானம், யோகநாதன், விமலச்சந்திரன் மற்றும் சந்திரகுமார், நடராஜன், யோகேஸ்வரி, தில்லைராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல. 184 ஆனந்தன் வடலி (AV) வீதி அரியாலையில் அமைந்துள்ள இல்லத்திலிருந்து பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**184, A.V வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18016) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 09 . 1935



மறைவு
11 . 11 . 2021

## வாரித்தம்பி இராஜலக்ஷ்மி

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி இராஜலக்ஷ்மி அவர்கள் கடந்த (11.11.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், திரு.திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் ஆசை மருமகளும், திரு.வாரித்தம்பியின் (முன்னாள் விதானையார், முள்ளியான்) அவர்களின் அன்பு மனைவியும், சிவநாதன், சிவபாக்கியம், காலஞ்சென்ற நாகேஸ்வரி, செல்வராணி, கேதீஸ்வரி, விஜயலக்ஷ்மி, சொரூபராணி, சிவகணேஷநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலாயுதம், சதானந்தன், தயாபரன், வளர்மதி, விமலேந்திரன், சாந்திமதி, சந்திரவதனா ஆகியோரின் அன்பு தாயாரும், ரஜிதா, ராஜி, தர்சா, தேவராசா, சயந்தன், குமிதினி, சிறிபிரகாஸ் (உரிமையாளர்- குகன் ஸ்ரூடியோ, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கா, டிவ்வியா, கீர்த்தனா, மிதுன், மனோஜ், பவித்திரா, நிதர்சன், ரிஷானா, பிரீத்தி, பிரணவன், பானுகோபன், வைதேகி, அம்ருதா, சேருகன், வீணா, நிலானா, துளசிகா, தாரணி, சங்க்வி, ரமணா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனத்துக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**புகையிரத நிலைய ஒழுங்கை,**
**சாவகச்சேரி. 077 3039 450**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 5902) 1-6

# எல்லையற்ற அதிகாரங்கள் வழங்கியதாலேயே ஆபத்து

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.13

**அரசுக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியதன் எதிர் விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு எமது நாட்டு அப்பாவி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதன் அழுத்தத்தை ஒட்டு மொத்த நாட்டு மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அரசின் தன்னிச்சையான வேலைத்திட்டத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் மினுவாங்கொடை அமைப்பாளர் சமிந்த டி சில்வாவின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுமுன்தினம் மினுவாங்கொடை நகர மத்தியில் நடைபெற்றது. அதில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்களின் இதயத்துடிப்பை புரிந்துகொள்ளாத மக்கள் படுகின்ற எல்லையற்ற துன்பங்களை கண்டு திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்ற ஓர் அரசே இன்று நாட்டில் உள்ளது. மக்களின் தேவையையும் கவலையையும் புரிந்து கொள்வதற்குப் பதிலாக அரசு தூதுவராலயங்களுக்கு முன் மண்டியிட வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது - என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் ரணதுங்கவும் கலந்து கொண்டதுடன், அவர் ஐக்கிய மக்கள் சக்தியிலும் இணைந்து கொண்டார். (எ-இ)

# பொதுமகன் மீது தாக்குதல் இராணுவ வாகனம் முற்றுகை

## வவுனியாவில் நேற்றிரவு சம்பவம்



வவுனியா, நவ. 13

இராணுவத்தினர் பொதுமகன் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்று தெரிவித்து இராணுவ வாகனம் ஒன்று வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றுஇரவு 7.30 மணியளவில் பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டது.

வவுனியா ரயில் வீதியூடாக சென்ற இராணுவ வாகனத்தை முச்சக்கரவண்டி சாரதி முந்திச் சென்றுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கும் முச்சக்கரவண்டி சாரதிக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பொதுமகன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத்தொடர்ந்து அந்தப் பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் இராணுவ வாகனத்தை முற்றுகையிட்டனர். அந்த இடத்துக்குவந்த வவுனியா பொலிஸார் இராணுவ வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்று சிறிது நேரத்தின் பின்னர் அதை விடுவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (து-18)

# சிறுமி மீது வன்புணர்வு 2 இளைஞர்கள் கைது

## பருத்தித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 13

15 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் தனித்து நின்ற 15 வயதுச் சிறுமியை பொலிஸ் காவலில் எடுத்துப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு அழைத்துச் செல்லப்பட்ட சிறுமி, இருவேறு நேரங்களில் இரண்டு இளைஞர்களால் வன்புணர்வுக்கு உள்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட சிறுமி சட்ட மருத்துவ வல்லுநரின் மருத்துவ அறிக்கைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 19 மற்றும் 24 வயதுடைய சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-20)

# மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு வியாபாரிகள் கடும் பாதிப்பு

கிளிநொச்சி,நவ.13

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான சந்தையில், உள்ளூர் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், மரக்கறி வியாபாரிகளின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயச் செய்கைக்கான உர வகைகள் இல்லாத காரணத்தால் விவசாயிகள் பலர் மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளவில்லை. அதனால் கிடைக்கக் கூடிய மரக்கறிகளை உரிய விலைக்கு பெற முடியவில்லை. இதனால் சந்தையில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் வருமானம் பெறும் வியாபாரிகள் அவர்களது தொழில் முடங்கியுள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-4-6)



# 20 ஏக்கர் வயல் முற்றாக அழிவு

கிளிநொச்சி,நவ.13

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிளாலியில், சுமார் 20 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

வயல்களுக்குள் வெள்ளம் வடிந்தோட முடியாமல் தேங்கியுள்ளது. குறித்த வயல் எல்லைப் பகுதியில் உள்ள வாய்க்காலில் குப்பைகள் தேக்கமடைந்துள்ளதால், வெள்ளம் வடிந்தோட முடியாமல் தேங்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டும் இவ்வாறே அழிவைச் சந்தித்தோம். எமது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெள்ளம் தேங்காதவாறு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-214)

# கைதாகும் பயத்திலேயே தவறு என்று வாக்குமூலம்

## அசாத் சாலி வழக்கில் சாட்சி வாக்கு மூலம்

கொழும்பு, நவ.13

அசாத் சாலி வெளியிட்ட கருத்துக்கள் உண்மையானால் தன்னையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துவிடுவார்களோ எனும் பயத்தில், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வினவிய சந்தர்ப்பத்தில் அசாத் சாலியின் கருத்து தவறானது என வாக்குமூலமளித்தேன் என்று பொதுமகன் ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியாளராக பெயரிடப்பட்டிருந்த, திஹாரி பகுதியைச் சேர்ந்த மொஹம்மட் பிஸ்ருல் ஹாபி மொஹம்மட் ரிஸ்வான் எனும் நபரே, அசாத் சாலி சார்பில் குறுக்கு விசாரணை செய்த ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவின் கேள்விகளுக்கு பதிலளித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சிகள் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் 3 ஆவது நாளாகவும் நடைபெற்றன. அதேநேரம் அசாத் சாலியை தனக்கு தெரியும் என கூறிய சாட்சியாளர், நீதிமன்றில் அசாத் சாலி இருந்த போதும், அவரை அடையாளம் காணத் தவறினார்.

இதன்போது வழக்குடன் தொடர்புபட்ட, அசாத் சாலி கடந்த 2021 மார்ச் 10 ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் முழுமையான பதிவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளும், இரு தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்ட செய்திகளின் வடிவமும் நீதிமன்றில் ஒளிபரப்பு செய்யப்பட்டன.

முதலில் பௌத்த கேந்திர மத்திய நிலையத்தின் பணிப்பாளர் அங்குனுகொல்லே ஸ்ரீ ஜினாநந்த தேரர் சாட்சியமளித்தார். ஜினாநந்த தேரரைத் தொடர்ந்து, ஊடகவியலாளர் தினித் சமில்க சம்பத் சாட்சியமளித்தார்.

மேலதிக சாட்சி விசாரணைகளுக்காக வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** காத்திருந்த நல்ல விஷயம் ஒன்று இன்றைக்கு நடைபெறும். தவறு செய்பவர்களைத் தட்டிக்கேட்டு உணரச் செய்வீர்கள். நல்லுறவு ஏற்படுத்தும் முயற்சி ஒன்றில் சிறந்த பலன்கள் ஏற்படும். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்:** பணி, தொழிலில் முன்னேற்றம் நன்றாக இருக்கும். குடும்பத்தினருடன் இருந்து வந்த பிரச்சினைகள் அனைத்தும் குறையும். தேவையற்ற குழப்பங்களைப் புறந்தள்ளிவிடுங்கள்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் செயற்பட்டு தள்ளிப்போட்ட பணிகளை முடிப்பீர்கள். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். பணியிடத்தில் பகை ஒன்று தீரும். போராடி வெல்வீர்கள்.

**கடகம்:** சில விஷயங்களில் திட்டமிட்டதற்கு மாறாக நடக்கக்கூடும். வேண்டாத சிலரின் செயற்பாடுகளால் அமைதி குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கவலை தீரும். இளைஞர்கள் முயற்சியைக் கூட்டுவீர்கள்.

**சிம்மம்:** நேற்றைய வருத்தங்கள் தீரும். பெண்கள் மூலம் விருப்பம் கைகூடும். வியாபாரத்திலும், பணியிடத்திலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். எந்த விஷயம் பற்றியும் பயப்பட வேண்டாம். மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** புதிய பொருட்கள் வாங்க வாய்ப்புகள் வரும். கவலைகள் குறையும். உங்களின் முயற்சிகள் கைகூடும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** நிம்மதியான நாள். இன்றைய நிகழ்வுகள் மனமகிழ்ச்சி தரும். நேர்மையான உழைப்பால் உயர் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். உங்களின் செல்வாக்குக் கூடும்.

**விருச்சிகம்:** புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். தைரியம் கூடும். சுபநிகழ்ச்சி பற்றிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். நவீன ரக வாகனம் வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** மனதில் இருந்த சுமை குறையும். பணி பற்றிய விஷயம் உறுதியாகும். சற்றும் எதிர்பாராத நபர்களிடம் இருந்து உதவி கிடைக்கும். சிரமங்களும், சிக்கலும் குறையும்.

**மகரம்:** அதிக வட்டிக் கடனை ஒரு வழியாக அடைத்து நிம்மதி அடைவீர்கள். நெருங்கிய நண்பர்களின் இயல்பை புரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.


**கும்பம்:** பிள்ளைகளுக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வீடு, வாகனம் வாங்குவீர்கள். பிரச்சினைகள் நீங்கும்.

**மீனம்:** குடும்பத்தில் ஒருவருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். குழந்தைகள் உங்களுக்கு ஒத்துழைப்பர். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணியிடத்தில் உங்கள் கை ஓங்கும்.

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 2021 -2021

குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். நவகிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு பகவான் பெயர்ச்சியாகும் பொழுது அனைத்து ராசியினருக்கும் நற்பலன்களை வழங்குவார். குருபகவான் நேர்கதியில் **நவம்பர் 13ஆம் திகதி (இன்று)** மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். மகரம் கும்பம் மீனம் ஆகிய ராசிகளில் பயணம் செய்ய இருக்கும் குரு பகவான் 2022ஆம் ஆண்டு என்ன செய்ய இருக்கிறார்? அதனால் 12 ராசிக்காரர்களுக்கும் கிடைக்கப் போகும் பலன்கள் என்னென்ன? என்பதைப் பார்ப்போம்.






வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை அறிந்து அதற்கேற்ப வாழ்வை அமைத்துக்கொண்டு சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி முன்னேறத் துடிக்கும் மேஷ ராசி அன்பர்களே...

தற்போது உங்களின் 10 ஆம் இடத்தில் அமர்ந்து பலன்கள் தந்துகொண்டிருந்த குருபகவான் உங்கள் முயற்சிகளுக்கெல்லாம் முட்டுக்கட்டைகளைப் போட்டுக்கொண்டிருந்தார். பணிச்சுமை அதிகரித்ததோடு நில்லாமல் தேவையற்ற பழிச்சொற்களையும் கேட்க வேண்டியிருந்ததே இனி அந்த நிலையை மாற்றப்போகிறார் குருபகவான்.

சிம்மத்தை குருபகவான் ஐந்தாம் பார்வையாய் பார்ப்பதால் இல்லறம் இனிப்பாகும். வாரிசை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தம்பதியருக்கு வாரிசு உண்டாகும். வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறும். இதுவரை பிதுர்ராஜ்ஜிய சொத்தில் பிரச்சினைகள் இருந்துவந்ததே அது சாதகமாக முடிவுக்கு வரும்.

ராசிக்கு 7 ம் வீடான துலாமை குரு பகவான் பார்ப்பதால் மனதில் இருந்த சிக்கல்கள் சோர்வு முதலியன முடிவுக்கு வரும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். செயல்களையும் விரைந்துமுடிப்பீர்கள். எதிர்பாராத பொருள்வரவுக்கும் வாய்ப்புண்டு.

### 13.11.2021 முதல் 30.12.2021 வரை

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் அவிட்ட நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்வதால் போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத பணவரவு வாய்க்கும். துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். அதனால் நன்மைகள் உண்டாகும். இதுவரை தயங்கித் தயங்கிப் பேசிக்கொண்டிருந்தவர்களின் பேச்சில் ஒரு தீர்க்கமும் உறுதியும் தென்படும். புதிய வீடு மனை வாங்கும் விஷயங்கள் சாதகமாகும். பழைய சொத்தை நல்ல விலைக்கு விற்று லாபம் பார்ப்பீர்கள். உறவுகளுக்கிடையே நல்ல புரிதல் உண்டாகும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். வழக்கு விடயங்களில் உங்கள் பக்கமே தீர்ப்பாகும். கவலைப்பட வைத்த தாயாரின் உடல் நிலை இப்போது சீராகிவிடும். உறவினர்களின் அன்புத் தொல்லையும் குறையும்.

### 31.12.2021 முதல் 2.3.2022 வரை

இந்தக் காலகட்டத்தில் ராகு பகவானின் சதயம் நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்ய இருக்கிறார். இந்தக் காலத்தில் நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுத்துப் போகவேண்டும். கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம், போட்டி மனப்பான்மை ஆகியவற்றைத் தவிர்ப்பது அவசியம். விட்டுக்கொடுத்துப் போவதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தொடரலாம். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

### 2.3.2022 முதல் 13.4.2022 வரை

இந்தக் காலகட்டத்தில் குருபகவான் தன் சொந்த நட்சத்திரத்திலேயே சஞ்சாரம் செய்வதால் இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பிள்ளைகளுக்குத் திருமண முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மேஷ ராசி அன்பர்களுக்கு குழந்தைப் பேறு கிடைக்கும். புண்ணியத் தலங்களுக்குச் சென்று இறைவழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றுவீர்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நேரம் இது. நல்ல செய்தி வரும் காலம் இது. கலைஞர்களுக்கு இது பொன்னான காலம். புதிய வாய்ப்புகள் உங்கள் வாசலைத் தட்டும். பழைய பொலிவைப் பெறுவீர்கள். மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி இதுவரை தடுமாற்றதோடு இருந்த உங்களைத் தாங்கிப் பிடித்து வெற்றிப்பாதையில் நடத்தும்.




# வெள்ளத்தில் சென்னை



புதுடில்லி, நவ.13

தமிழகத்தின் தலைநகர் சென்னையில், 2015ஆம் ஆண்டுக்கு பின் கனமழை கொட்டுகிறது. கனமழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடந்த 5 நாள்களில் சென்னையில் 491 சதவீதம் அதிகமாக மழை பெய்துள்ளது. தலைநகர் சென்னை வெள்ளநீரில் தத்தளித்து வருகிறது. அத்துடன் மீட்புப் பணிகளில் தீயணைப்பு மற்றும் நீச்சல் வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இரு நாள்களாகப் பெய்து வரும் கனமழையால் சென்னையிலுள்ள தாழ்வான பகுதிகள் அனைத்தும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. அத்துடன் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏரிகள் திறந்து விடப்பட்டுள்ளதால் கூவம் ஆற்றை அண்டியுள்ள சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. (ச-இ)



சென்னையில் மழைநீர் தேங்கியதால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட முதல்வர் ஸ்டாலின் அங்குள்ள மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கினார். அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்ட முதலமைச்சர் சாலையோர கடையில் அமர்ந்து தேநீர் அருந்தியுள்ளார். இந்த ஒளிப்படம் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகிறது. (ச)

# ஆட்கடத்தலுடன் தொடர்புடைய எட்டுப் பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, நவ. 13

**கடல் வழியாக கனடாவுக்கு நபர்களைக் கடத்த முயன்ற பிரதான கடத்தல்காரரான கண்ணன் உட்பட 8 பேர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

சிலாபம் மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி சிலாபம் கடற்பகுதியில் இழுவைப் படகுமூலம் கனடா நோக்கிச் சென்ற 19 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்த மனிதக் கடத்தல் நடவடிக்கையின் மூளையாக இருந்தவர், 'கண்ணன்' என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கனடாவுக்குச் அழைத்துச் செல்வதாகக்கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் 30 லட்சம் ரூபா முதல் 35 லட்சம் ரூபா வரை அவர் பெற்றுள்ளார்.

போரின் பின் மலேசியாவுக்குத் தப்பிச் சென்ற பிரதான சந்தேகநபரான 'கண்ணன்' அண்மையில் இலங்கைக்குத் திரும்பி மனித கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## பந்துல குணவர்த்தனவின் தேநீர் செலவு 290,000 ரூபா

*ஐக்கிய மக்கள் சக்தி விளாசல்*

கொழும்பு, நவ. 13

ஒரு குடும்பம் வாழ ஒரு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபா போதும் எனத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் மாதாந்தத் தேநீர் செலவு மட்டும் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.துஷார இந்துனில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன முதலில் தனது அலுவலகத்தைச் சதொச கட்டடத்தின் மேல் மாடியில் அமைத்திருந்தார். பின்னர் அதில் திருப்தி அடையாமல் தனது அலுவலகத்தைக் காலி வீதிக்கு மாற்றினார். அந்தக் கட்டடத்தின் மாத வாடகை மட்டும் 80 இலட்சம் ரூபா.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன ஒரு குடும்பம் வாழ ஒரு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 ரூபா போதும் எனக் கூறியிருந்தார். ஆனால், அவரின் அலுவலகக் கட்டடத்தின் மாத வாடகை மட்டும் 80 இலட்சம் ரூபா. அதுமட்டுமன்றி அமைச்சர் பந்துலவின் மாதாந்த தேநீர்ச் செலவு மட்டும் 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா' -என்றார். (ம-22)

## ஒரே நாடு, ஒரே சட்டம்

# ஜனாதிபதி செயலணியால் நல்லிணக்கம் பாதிப்புறும்!

கொழும்பு, நவ. 13

'நாட்டில் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்திக்கு அரசில் இருக்கும் சிலர் முயற்சிக்கும் நேரத்தில் 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி அந்த முயற்சிகளுக்கு ஆப்புவைத்துவிடுமோ என்ற அச்சமும், கவலையும் ஏற்பட்டுள்ளது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான எச்.எம்.எம்.ஹரீஸ் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புக்குச் சம்பந்தமில்லாத சில சட்டங்களை உருவாக்குவதற்கு அரசு முனைகின்றது. குறிப்பாக பல ஆண்டுகாலமாக இருந்துவந்த தனியார் சட்டங்களை ஒழிக்க ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது.

தனியார் சட்டங்களுக்கும் பாதுகாப்புக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என எமக்குத் தெரியாதுள்ளது. எனவே, இவ்வாறான ஜனாதிபதி செயலணிகள் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்துகின்ற நடவடிக்கையாக மாறிவிடும் என்ற அச்சம் சிறுபான்மை சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ளது. நாட்டில் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்திக்கு இந்த அரசில் இருக்கும் சிலர் முயற்சிக்கும் நேரத்தில் இந்தச் செயலணி அந்த முயற்சிகளுக்கு ஆப்புவைத்துவிடுமோ என்ற அச்சம், ஏற்பட்டுள்ளது -என்றார். (ம)



## வாழ்வாதார இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கல்

வடக்கு மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருந்து தொழில்முயற்சியின்போது உயிரிழந்தோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு வடக்கு மாகாண சபை நிதியிலிருந்து வாழ்வாதார இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அதன்படி மன்னார் மேற்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவராக இருந்து தொழில் நிமித்தம் மரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்த தி.கறுப்பையா குடும்பத்தினருக்கு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத் திணைக்களத்தால் ஒரு லட்சம் ரூபா இழப்பீட்டுக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. கொடுப்பனவை, வடக்கு மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் மு.நந்தகோபாலன், குடும்பத்தினரிடம் வழங்கினார். (ச)

## அத்தியாவசியப் பொருள்கள் வழங்கிவைப்பு


யாழ்ப்பாணம், நவ.13

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான், ஜே/152 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

பெரியவிளான் சிகரம் அமையத்தின் மூத்த உறுப்பினர் குமரதாஸின் நிதிப்பங்களிப்பில், பெரிய விளான் சிகரம் அமையத்தால் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி1-125)

## நூல் வெளியீடு



முல்லைத்தீவு, நவ.13

முல்லைத்தீவைச் சேர்ந்த நதுநசியின் 'தடம் தந்த வரிகள்' என்னும் கவிதை நூல் வெளியீடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு, முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில், கடந்த செவ்வாய்க்கிழமை 9 ஆம் திகதி ஒட்டுசுட்டானில் இடம்பெற்றது.

வே.முல்லைத்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வவுனியா தமிழ்ச்சங்கத்தின் நிறுவுநர் தமிழருவி த. சிவகுமாரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஓ-ரி1)

## மண்ணுக்குள் புதையுண்டது இரு மாடி வர்த்தக நிலையம்

*உயிர் தப்பிய குடும்பத்தினர்*



கண்டி. நவ.13

இரு மாடிகளைக் கொண்ட கட்டடம் மண்ணுக்குள் புதையுண்டதால், அங்கிருந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இந்தத் திகில் சம்பவம் கம்பளை நுவரெலியா பிரதான வீதியில் அட்டபாகை பிரதேசத்தில் நடந்துள்ளது.

கம்பளை நகரிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தொலைவில் அட்டபாகை பிரதான வீதிக்கு அருகாமையில் குறித்த வர்த்தக நிலையம் அமைந்திருந்தது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக நேற்று முன்தினம் இரவு குறித்த வர்த்தக நிலையம் முற்றாகச் சரிந்து விழுந்துள்ளது. வர்த்தக நிலையத்தில் இருந்த பொருள்கள் அனைத்தும் மண்ணுக்குள் புதையுண்டன.

வர்த்தக நிலையத்தில் இருந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, உறவினர்கள் வீட்டுக்குச் செல்வதற்கு வெளியே வந்த தருணத்தில், இந்த இடர் நிகழ்ந்துள்ளது. அதனால் மூவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

அதேவேளை அந்தப் பகுதி மேலும் தாழிறங்கும் அபாயம் இருப்பதால் ஒருவழிப் போக்குவரத்துக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## பட்ஜெட்...

இலங்கையின் 76 ஆவது பாதீடு நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச சபையில் நேற்று பி.ப.2 மணியளவில் முன்வைத்தார்.

தனது கன்னி பட்ஜெட்டை முன்வைத்து நிதி அமைச்சர் பஸில் உரையாற்றிக் கொண்டிருக்கையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சபைக்கு வந்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அருகிலுள்ள ஆசனத்தில் அமர்ந்துகொண்டு நிலைமையை அவதானித்தார்.

புதிய பட்ஜெட்டில் மக்களுக்கு ஆச்சரியம் காத்திருக்கிறது எனவும், இதுவரை காலமும் இல்லாத பல புதிய விடயங்களைக் கொண்ட வித்தியாசமான வரவு செலவுத் திட்டமாக இது இருக்கும் எனவும் ஆளுங் கட்சியினர் அண்மைக்காலமாக கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். இதனால் இந்த பட்ஜெட் தொடர்பில் மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக விலையேற்றத்தை தடுப்பதற்கான பொறிமுறைகள், விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம், அரச அலுவலர்களுக்கான சம்பள உயர்வு போன்ற பல விடயங்களை எதிர்பார்த்த மக்களுக்கு, பஸில் ராஜபக்ச முன்வைத்த பட்ஜெட் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

நேற்றைய வரவு செலவுத் திட்டம் மீதான உரையின் பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை 7 நாள்களுக்கு வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பு இடம்பெறவுள்ளது. இரண்டாம் வாசிப்புக்காக வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும்.

வரவு, செலவுத் திட்ட குழுநிலை விவாதம் மற்றும் வரவு செலவுத்திட்டம் மீதான மூன்றாம் வாசிப்பு எதிர்வரும் 23ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிவரையான 16 நாள்களுக்கு இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில், பாதுகாப்பு அமைச்சின் செலவுக்காக 373 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சுக்கு 185.9 பில்லியன் ரூபாவும் கல்வி அமைச்சுக்கு 127.6 பில்லியன் ரூபாவும் சுகாதார அமைச்சுக்கு 153.5 பில்லியன் ரூபாவும் விவசாய அமைச்சுக்கு 243.9 பில்லியன் ரூபாவும் அடுத்தவருடத்துக்கான பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்தச் செலவு 2505.3 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது இந்தவருடம் 2538 பில்லியன் ரூபாவாக இருந்த அரசாங்க செலவீனத்தில் 33 பில்லியன் ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முதல் வரவு- செலவுத்திட்ட விவாதத்தின் முழுக் காலப்பகுதியிலும் சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக அமர்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது நாடாளுமன்றக் கலரி பொதுமக்களுக்கு திறக்கப்படாது . வரவு செலவுத் திட்ட குழு அமர்வில் குறைந்த எண்ணிக்கையிலான அரசு அதிகாரிகள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஆயினும் அழைக்கப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திர தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கான சிறப்பு விருந்தினர் பகுதி திறக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட உரை முடிந்ததும், நிதியமைச்சரால் பாரம்பரிய தேநீர் விருந்தும் நேற்று மாலை வழங்கப்பட்டது. (அ)

## துண்டுவிழும்...

மொத்த வருமானமாக 2 ஆயிரத்து 284 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவீனங்கள் உட்பட மொத்த செலவீனங்களாக 3 ஆயிரத்து 912 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி 2022 ஆம் நிதியாண்டுக்கான துண்டுவிழும் தொகை ஆயிரத்து 628 பில்லியன் ரூபாவாக காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சற்று குறைவாகக் காணப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆயிரத்து 826 பில்லியன் ரூபா துண்டு விழும் தொகையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-44)

## சோமாலியாவாக...

முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் தெளிவான திட்டங்கள், தீர்வுகள் என ஒன்றும் இல்லை." என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் முன்வைக்கபட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே சஜித் இவ்வாறு சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "மக்கள் நலத்திட்டங்கள் அடங்கிய வரவு செலவுத் திட்டமொன்றையே மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் தெளிவற்ற வெற்று ஆவணமொன்றே நிதி அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை முகாமை செய்வதற்கான தெளிவான வழிகாட்டல்கள் இல்லை. குறுகிய மற்றும் நீண்டகால நோக்குகளும் உள்ளடக்கப்படவில்லை. அதேபோல பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழிவகைகள் இல்லை. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைப்பதற்கான வேலைத்திட்டமும் இல்லை. பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது எப்படி, வெளிநாட்டு முதலீடுகளை, இருப்புகளை எவ்வாறு அதிகரிப்பது என்பன தொடர்பிலும் தெளிவு இல்லை. விவசாயிகளுக்கும் நேரடி பதில் கிடைக்கவில்லை.

எண்கணித மோசடிகளும் இடம்பெற்றுள்ளன. அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளது. இந்தநிலையில், சம்பள அதிகரிப்பு இல்லாமல் மக்கள் எப்படி வாழ்வது?. மக்கள் பற்றி சிந்திக்காத பாதீடு இது. அரசியல் கைக்கூலிகளுக்கும், ஒப்பந்தக்காரர்களுக்கும் கவனிப்புகள் இடம்பெற்றுள்ளன. நாட்டை வேகமாக வீழ்ச்சி பாதைக்கு அழைத்துச்செல்லும் பாதீடு இது. சுருக்கமாக சொல்லப்போனால் எமது நாட்டை சோமாலியாபோல் ஆக்குவதற்கான வரவு-செலவுத் திட்டமே இது. - என்றார். (து-44)

## பொருள்களின்...

என்று, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றில் நேற்றுமுன்வைத்து உரையாற்றினார். இது இலங்கையில் 76 ஆவது பாதீடு ஆகும். நிதி அமைச்சர் என்ற வகையில் அவருடைய கன்னி வரவுசெலவுத் திட்ட உரையாக இது அமைந்திருந்தது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் சமாதானம், தேசிய பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இனிமேலும் பயங்கரவாதத்துக்கு நாட்டில் இடமில்லை. பிராந்தியத்தில் அரசியல் ஸ்திரத்தன்மை கொண்ட ஒரே நாடு இலங்கை. ஊழல் அற்ற ஜனாதிபதி, பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கம், சிரேஷ்ட அரசியல் தலைவர் மஹிந்த ராஜபக்ச, சுயாதீன நீதிமன்றம் மற்றும் சிறந்த உட்கட்டமைப்புகள் ,அணிசேரா கொள்கை கொண்ட நாடு இலங்கை. அதுமட்டுமன்றி, நாம் கடந்த காலங்களில் இல்லாதவாறு சர்வதேச, இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தியுள்ளோம். சுயாதீன நீதித்துறை மற்றும் ஒழுக்கத்தை பேணக்கூடிய அரசாங்கம் இன்று இருக்கிறது.

கொரோனாவால் மீண்டும் நாங்கள் வழமைக்கு திரும்புவது பெரும் சவால். கொரோனாத்தொற்றால் அரச திறைசேரிக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூ. 500 பில்லியனுக்கும் அதிகம். வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு செலாவணியை அதிகரிப்பதற்காக, தூதுவர்களுடன் கலந்துரையாடி வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**புதிய நடைமுறை**

வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்காக தற்போது நடைமுறையிலுள்ள நிபந்தனைகளை தளர்த்தி புதிய முறைகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இலங்கையை ஐந்து மகா கொள்கைகளைக் கொண்ட நாடாக மாற்றுவோம். விவசாயிகளை பாதுகாப்பதற்கு எங்களுடைய அரசாங்கம் முன்னின்று செயற்படும். விவசாயப் பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கும் தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கும் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

ஆயுள்வேத மருத்துவமனைகளை ஏற்படுத்துவதற்கும் ஆயுள்வேத வைத்திய துறையை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய ஆடை உற்பத்தியில் பத்திக் ஆடை உற்பத்திகளை அதிகரித்து அதன் ஊடாக வெளிநாட்டு செலாவணியை பெற்றுக் கொள்ள விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

ஆடைத்தொழிற்சாலைகளினால் 4 பில்லியன் வருமானம் பெற்றாலும் புடவைகளை பெற்றுக்கொள்ள 2 பில்லியன் செலவு செய்வதால் தேவையான புடவைகளை நாட்டுக்குள் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து இலங்கையில் மருந்துவகைகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

வரிகளை முறையாக வசூலிப்பதற்கு உள்நாட்டு வரி திணைக்களத்தை பலப்படுத்துமாறும்யோசனை முன்வைக்கின்றேன். தொலைக்காட்சிகளுக்கான அலைவரிசை பகிரங்க ஏலத்தில் விடப்படும். கூட்டுறவு சங்கங்களையும் சமுர்த்தி வங்கிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு யோசனையை முன்வைக்கின்றோம். சிறு உற்பத்தியாளர்கள் முதல் பெரும் உற்பத்தியாளர்கள் வரை தடையின்றி சேவைகளை வழங்கும் சூழலை நாம் உருவாக்க வேண்டும். அந்நியச் செலாவணியின் இருப்பு குறைந்துள்ளதையும் ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். - என்றார். (து-இ)

## கடன்சுமை...

ரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமே இது" என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

"நாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேபோல பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு உரிய தீர்வு, பதில் இல்லை. அத்துடன், சேதனப்பசளையை பயன்படுத்தி விவசாயம் செய்யுமாறும், விளைச்சல் பாதிக்கப்பட்டால் அதற்கான இழப்பீடு வழங்கப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது. ஆனால், அதற்கான எந்தவொரு ஒதுக்கீடும் இல்லை. இடையில் குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். அப்படியானால் விவசாயிகளுக்கு எப்படி இழப்பீடு வழங்கப்படும்? அரச செலவுகள் அதிகம். வருமானம் குறைவு. சுமார் 3 லட்சம் கோடி ரூபாவை கடன் பெறுவதை நோக்காக கொண்ட பாதீடே இது" - என்றார். (து-44)

## தொற்று...

வித்துள்ளது. அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 48 ஆயிரத்து 784 ஆக எகிறியுள்ளது. அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 333 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 23 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 950 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட சாவுகளில் 11 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 21 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். (து-22)

## யாழ். இந்துக்கல்லூரியின்...

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரிட்டன் கிளையின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்த மைதானம் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்ந்நிகழ்வில், கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில்மாறன், கல்லூரியின் பிரிட்டன் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் ஜெயபிரகாஷ், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்தநிகழ்வில் பங்கேற்றனர்.

இலத்திரனியல் ஸ்கோர்போட், கழக மனை, பயிற்சிகளுக்கான இடம் போன்றன இந்த திடலில் உள்ளமை விசேட அம்சமாகும். இந்த விளையாட்டுத்திடலானது வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலேயே மிகவும் நவீனகரமான ஒரு மைதானமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மைதானத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரி மோதும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-20)

## யாழில்...


ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஒரு வீடு முழுமையாகவும், 112 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்தோடு தற்போது 4 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 47 குடும்பங்களைச் சேர்ந்த 164 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-20)

# புவியின் வெப்பநிலையைக் குறையுங்கள்

## கடற்தண்ணீரில் நின்றவாறு துவாலு அமைச்சர் மன்றாட்டம்




**துவாலு, நவ. 13**

**பசுபிக் கடலில் உள்ள சின்னஞ்சிறு நாடான துவாலு தீவின் வெளிவிவகார அமைச்சர் பருவநிலை மாநாட்டுத் தலைவர்களுக்குக் கவன ஈர்ப்பு உரை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அவரது இந்த உரை உலகெங்கும் வைரலாகி வருகின்றது.**

கடற்கரையில் முழங்கால் அளவு தண்ணீரில் நின்றவாறு அவர் வழங்கிய பருவநிலை மாநாட்டு உரை உலகம் எங்கும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது. வெப்பம் அதிகரிப்பதால் பல நாடுகளும்பல்வேறு விதமான பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றன. குட்டித் தீவுகளைப்பொறுத்தவரை வாழ்வா சாவா என்றநிலை. பசுபிக் சமுத்திரத்தில் உள்ள சின்னஞ் சிறு தீவுகளின் ஆயுள் காலம் இன்னும் 50 வருடங்கள் மட்டுமே என்று கணிப்பிடப்படுகிறது.

கடல் மட்டம் வேகமாக உயர்ந்துவருவதனால் மறைந்து போகின்ற ஆபத்தில் உள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்று துவாலு. தென்பசுபிக் கடலில் பிரிட்டிஷ் பொதுநலவாயத்தின் கீழ் அடங்குகின்ற சுதந்திரமான தீவு நாடு அது. பவளப் பாறைகள் கொண்ட அழகிய கடற்கரை மற்றும் கடற்பறவைகளுக்கு அடைக்கலம் வழங்குகின்ற மக்கள் வசிக்காதசிறிய தீவுகளையும் உள்ளடக்கிய நாடு அது. ஆனால் அது மிக வேகமாக கடலில் அமிழ்ந்து வருகிறது. இன்னும் 50 வருடங்களில் அந்த நாடு இருந்த இடம்தெரியாமல் மறைந்து விடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



துவாலுவும் அது போன்று ஆபத்தை எதிர்கொள்கின்ற நூற்றுக்கணக்கான தாழ்ந்த தீவுக் கூட்டங்களையும் பாதுகாப்பதே கிளாஸ்கோ மாநாட்டின் முதல் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாக உள்ளது என்பதை வலியுறுத்துவதற்காகவே அமைச்சர் சைமன் கோஃப்ரீப் இவ்வாறு ஒரு வீடியோ உரையை நீரில் நின்று ஆற்றியிருக்கிறார்.

இது ஒரு சாதாரணமான அரசியல் உரை அல்ல. பருவநிலை மாற்றமும் கடல் மட்ட உயர்வும் எங்களைப் போன்ற தீவு நாடுகளுக்கு மரண அச்சுறுத்தலாக மாறியுள்ளன. நாங்கள் மூழ்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு இங்கே நாங்கள் உணர்கின்ற ஆபத்தை அடுத்த நூறு ஆண்டுகளில் உலகம் முழுவதும் உணரும். எதையாவது செய்யாமல் இங்கே நாங்கள் இருந்துவிட முடியாது. வெப்பநிலையை 1.5 செல்சியஸ் என்ற அளவில் வரையறை செய்வது என்ற இலக்கை மாநாட்டின் பங்காளிகள் மதித்து நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு துவாலுத் தீவின் வெளிவிவகார அமைச்சர் தனது வீடியோ உரையில் மன்றாடியுள்ளார். (ம)

## ஐரோப்பாவில் மீண்டும் கொரோனா அதிதீவிரம்

கொரோனாப் பெருந்தொற்று ஐரோப்பாவில் மீண்டும் வேகமெடுக்க ஆரம்பித்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த 20 நாள்களாகவே ரஷ்யா, இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளில் கொரோனாத் தொற்று தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உருமாறிய டெல்டா வைரஸ்தான் இதற்குக் காரணம் என சொல்லப்படுகிறது. உக்ரைன், ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் பெறப்பட்ட மாதிரிகளை சோதனைக்கு உட்படுத்தியதில் 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட பாதிப்புக்கு டெல்டா வைரஸ் தான் காரணம் எனத்தெரிய வந்துள்ளது.

போலந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலும் தொற்றுப் பரவல் கணிசமாக அதிகரித்துள்ளது. இதிலும் டெல்டா வைரஸ்தான் முக்கிய பங்களிப்பு செய்திருக்கிறது. மாதிரிகளை சோதித்ததில் உக்ரைனில் 85 சதவீதமும், ஆஸ்திரியாவில் 75 சதவீதமும், ரஷ்யாவில் 70 சதவீதமும், பெல்ஜியத்தில் 65 சதவீதமும், உக்ரைனில் 64 சதவீதமும், பிரான்ஸில் 51 சதவீதமும் உருமாறிய டெல்டா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 50 ஆயிரத்து 196 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ளது. (ம)



## மூன்று மாதங்களில் மட்டும் 600 தீவிரவாதிகள் கைது!



கடந்த 3 மாதங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆயுததாரிகள் 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது என்று தலிபான் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. ஆனால், ஓகஸ்ட் 30ஆம் திகதி காபூல் சர்வதேச விமான நிலையத்தில் மனித வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தி ஐ.எஸ் தீவிரவாதிகள் தலிபான்களுக்கு சவால் விடுத்தனர். அதனைத் தொடர்ந்து மசூதிகளில் தாக்குதல், காபூல் மருத்துவமனையில் தாக்குதல் என ஆப்கானிஸ்தானின் அமைதிக்கு ஐ.எஸ். அமைப்பால் குந்தகம் விளைவிக்கப்பட்டது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே மேற்படி 600 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். (ம)

**வேலை வாய்ப்பு**
தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர் தேவை. தகைமை O/L, A/L
(CS 18004) 1-6
0775729724, 0755729715

**பெண் வேலையாள்கள் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதிசெய்வதற்கு
பெண் வேலையாள்கள் தேவை.
வயது எல்லை: 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம்: காலை 7.30 தொடக்கம்மாலை 5.30 வரை மாத வேதனமாக 17000/= தொடக்கம்25000/= வரை வழங்கப்படும்.
(cs.41058) (1.6)
074 049 0003

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்வதற்கு பெண்
வேலையாள்களும் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாள்களும் தேவை. வயது: 18 - 35
(cs.41056) (2.6)
077 419 5015

**கார் விற்பனைக்கு**
MITSUBISHI LANCER (ஜப்பான்) KB-xxxx இலக்க நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற கார் விற்பனைக்கு.
விலை : 33 லட்சம்
தொடர்பு : 077 6585 999
யாழ்ப்பாணம்.
(CS 18011) 1-6

**வேலைக்கு ஆட்கள் தேவை**
கடைசல் இயந்திர தொழிலில் (Lathe) அனுபவம் உள்ள ஒருவருக்கும் இயந்திர தகடு வெட்டுதல், மடித்தல் (Sheet Metal Shear, Bender) வேலைகளில் அனுபவம் வாய்ந்த ஒருவருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.
info.Esskaye.com
077 0070173 (whatsapp ஊடாக தொடர்புகொள்ளவும்)
(CS 18013) 1-6



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.